கலியுகாப்த்தம் 5116 உ014 ஆனி – ஆடி

# இந்துக்களின் குரல்

## Voice of Hindus



இனவழிப்பு சாதனையாளனைக்
கொண்டாடும் அமெரிக்கா



உலகின் மிகப் பெரியகோயில்
அங்கோர்வாட்

இந்துக்களின்
ஆடிமாதச் சிறப்புக்கள்

இந்துதேசிய மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார்? இந்துப்பெண்

அதிகாலை எழுந்திருந்து அன்புக்கணவன் பாதம்தொட்டு
விதியாலே! நீராடித்தினம் வாசலிலே! கோலமிட்டு
மதிபோலும் முகம்காட்டி மங்கைதனை அலங்கரித்து
மதிசூடும் அண்ணலை தொழுதெழுவாள் இந்துப்பெண்ணே!

பத்துமாதம் சுமந்து பெற்ற பாசம்மிகு பிள்ளைகளை
நித்தம் நித்தம் பேணி வளர்த்தே நீழ்புவியில் கல்வியூட்டி
சுற்றம் சூழஉறவு பேணி சுகமான வாழ்வு வாழ்ந்தே
எத்திசையும் புகழ் பரப்பும் ஏந்திழையாள் இந்துப்பெண்ணே!

மண்பற்றும் பொன்பற்று மனத்தினிலே! சிறிதுமின்றி
ஐம்பெரும் வேள்விக்கே! அகம்மகிழ்ந்து உதவிசெய்து
இன்புற்று எல்லோரும் இருப்பதனைக் கடமையெனக்
கண்போலக் கருதித்தினம் காட்சிதருவாள் இந்துப்பெண்ணே!

இல்லாள் இல்லிருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்விருந் தோம்பிப்பின் வருவிருந்து பார்த்திருப்பாள்
சொல்விருந்தால் அகம்குழைத்து சோற்று விருந்தளிப்பாள்
நல்விருந்தாவாள் தேவர்க்கு நங்கையவள் இந்தப்பெண்ணே!

கவிஞர் சரசாலையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் குரல்
Voice of Hindus
Email : voicesofhindus5@gmail.com

இந்துதேசிய மாதஇதழ்

கோப்பாய் தெற்கு
கோப்பாய்,
யாழ்ப்பாணம்
0776584497

செட்டியார்தெரு குருக்கள்மடம்
மட்டக்களப்பு
0654909437
0755511457

மலர் 01
குரல் 02

ஆசிரியர் குழு
யோ. துஷ்யந்தன்
ந. ஸ்ரீந்திரன்
சிவ. சுதர்சனன்

சஞ்சிகையில் உள்ள ஆக்கங்கள் இந்துத்துவ தகவல் களஞ்சியத்திற்கு உரியவை

கலியுகாப்தம் - 5116
ஜய வருடம்
ஆனி - ஆடி

**அன்பான இந்துத் தமிழர்களே! வணக்கம்**

"இந்துக்களின் குரல் இரண்டாவது மலரும் இறையருளால் வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சி. இதற்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலர் இந்துத்தமிழ் ஞானம், இந்து தமிழ்ச்சிந்தனைகள், இந்துத்துவம் ஆகியவற்றில் மையம் கொண்டு இந்துதமிழர்களுக்காவே வெளிவருகின்ற ஓர் அச்சு ஊடகமாக விளங்குகின்றது. இம் மலரினுள் இந்துக்கள் சார்பான பல்வேறு விடயங்குளம் இடம் பெற்று வருகின்றன.

வெகுசன ஊடகங்களின் சார்பு நிலைகள், வணிக சமரசங்கள், முன்முடிவுகள், இருட்டடிப்புக்கள், தனிக்கைகள் ஆகியவைகளின் தாக்கத்தையும் மீறி, மாற்றுச் சிந்தனைகளையும், சுதந்திரமாக முன்வைக்கவும், விவாதிக்கவும் இந்து தமிழர்களுக்கு இந்துக்களின் குரல் வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

இந்துதமிழ் அறிவியக்கமாக தொடர்ந்து வரும் பலவகை சிந்தனை இழைகளை ஒரு தூரிகையாக உங்களுக்கு வரைந்து காட்ட இந்துக்களின் குரல் துணை நிற்கும். தமிழ் வாசகர்களுக்கு ஒரு புத்துணர்வூட்டும் கோணத்தையும் ஆக்க பூர்வமான மாற்றுப் பார்வைகளையும் இது அறிமுகப்படுத்தும்.

அத்துடன் இன்று உலக அளவிலான கருத்துத் தளங்களிலும் தமிழ்ச் சூழலிலும் மிகுதியாக பேசப்பட்டு விவாதிக்கப்பட்டு வருபவைகளையும் உள்ளடக்கி, ஒரு உன்னதமான இந்து ஊடகமாக பரிணமிக்க உங்களின் உதவிகளையும் இறைவனின் ஆசியினையும் வேண்டி நிற்கின்றோம்.

மறு இதழில் கலக்கும் வரை
அன்புடன்
ஆசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ஒலிப்பவை


- விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்
- சித்தத்தைவென்ற சித்தானைக்குட்டி சுவாமிகள்
- ஆடிமாதச் சிறப்புக்கள்
- தமிழ் கற்கும் அமெரிக்கக் குழந்தைகள்
- ஜோதிடம் கற்றுக் கொள்ளலாமா?
- கண்ணதாசனும் அர்த்தமுள்ள இந்துமதமும்
- வண்ணத்துப்பூச்சி கற்றுத்தந்த பாடம்
- இனவழிப்பு சாதனையாளனைக் கொண்டாடும் அமெரிக்கா
- மீண்டுமொரு மேய்ப்பன் வருகைக்காக
- சரிசெய்
- ஊடகங்களின் இந்துதர்ம எதிர்ப்புக்கள்
- இந்துக்குடும்ப வாழ்க்கை நெறிமுறைகள்
- இந்துக்களது மெய்ஞ்ஞான சிந்தனைகளே ....
- தேங்காய் உடைப்பதன் தத்துவம்
- இந்துசமயத்திற்கு ஓர் அறிமுகம்
- புரிதல்
- கிறிஸ்துவராய் பிறந்தார் இந்துவாய் மலர்ந்தார்
- பணம் காக்காவிட்டாலும் புண்ணியம் காக்கும்
- பிள்ளையாரை வழிபடுங்கள்
- உலகம் வியக்கும் தமிழனின் கட்டிடம் - அங்கோர்வாட் ஆலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்


## உலக முதல்வன் நடராஜர்

**துஷ்யந்தன்**

பல்லாயிரக்கணக்கான கோவில்கள் இருந்தாலும் கோவில் என்றால் அது சிதம்பரத்தையே குறிக்கும். உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று நிலைகளில் இறைவனை வழிபடுவது சைவசமயத்தின் சிறப்பாகும்.

தாண்டவ நடராஜரின் திருவுருவமானது எல்லா சமயங்களின் தத்துவங்களையும் உள்ளடக்கியதாகும்.

நடராஜரின் அந்தத் திரு நடனக் கூத்து ஒவ்வொரு அணுவிலும் நடைபெறுவதாகச் சொல்வார்கள். அகிலம் முழுவதையும் வெளியாக – அரங்கமாகக்



Chidambaram Temple

அந்த வகையில் உருவமாகவும், அருவமாகவும் இறைவனைக் கொண்டாடும் இடம் சிதம்பரமாகும். சிதம்பரத்தைத் தவிர்த்து மற்ற சைவ ஆலயங்களிலெல்லாம் இலிங்கத்தையே வழிபடுவார்கள். இந்த வழிபாடனாது உருவமுள்ளதாகவும் உருவம் இல்லாததாகவும் கருதப்படுவதால் அது உருவ அருஉருவ வழிபாடாகும். சிதம்பரத்தில் காட்சி தரும் ஆனந்தத்


கொண்டு இறைவன் அங்கே நடனம் புரிகின்றார். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், அடக்கல் என்ற ஐந்தொழில்களையும் திரு நடனத்தின் மூலம் புரிகிறார். இச்செயலே ஒவ்வொரு அணுவுக்குள்ளும் இடைவிடாது நடந்தேறிக் கொண்டிருக்கிறது. அவருக்கு நான்கு கரங்கள், வலக்கரம் ஒன்றில் ஏந்தியிருக்கும் டமாருகம் ஒலி மூலம் அவர் உலகைப் படைக்கிறார் என்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பதாகும். மற்றொரு வலக்கரம் சகல விதமான ஜீவராசிகளையும் அவர் ஆசிர்வதிக்கிறார் என்பதைக் குறிப்பதாகும். இடது கரம் ஒன்றைத் தூக்கி நிற்கும் பாதத்தைச் சுட்டிக் காட்டி ஒவ்வொரு ஜீவனும் இறைவனின் திருவடியை அடைய முயல வேண்டும் என்பதைக் குறிப்பதாகும்.

மற்றொரு இடக்கரத்தில் இருக்கும் நெருப்பு அனைத்து மலங்களையும் பொசுக்கி ஜீவனைப் பரிசுத்தமாக்கும் தெய்வத் தன்மையைக் குறிக்கிறது. ஆணவ மலத்தை அடக்கிக் கட்டுப்படுத்தினால் தான் இறைவன் திருவடிப் பேறு கிட்டும் என்பதை முயலகனைக் காலால் மிதித்து நசுக்குவது போல் காட்டப்பட்டுள்ளது. துள்ளும் பாவணையில் இருக்கும் மான் உருவம் ஜீவர்களின் சஞ்சலத்தைக் குறிப்பதாகும். புலிக்கு இருப்பதைப் போன்ற வலிமையும் கொடிய குணமும் தன்னல உணர்வுக்கு உண்டு. அதை அடியோடு அழித்து நம்மிலிருந்து பிரித்து எடுத்து விட வேண்டும் என்பதை அரையில் கட்டியிருக்கும் புலித்தோல் உணர்த்துகின்றது. கங்கையும் திங்களும் இன்பத்தையும், தண்மையையும் குறிக்கின்றன.




CERN அணுஆராய்ச்சி மையத்திலுள்ள நடராஜர்

தாண்டவமாடும் முழுத் தோற்றமும் முடிவில் அடைய வேண்டிய பேரானந்த நிலையைக் குறிப்பதாகும். இப்படி அனைத்து இறைத் தத்துவங்களையும் உள்ளடக்கிய நடராஜரின் திருவுருவைக் கண்டு மேலை நாட்டினரே வியந்து போற்றுகிறார்கள். இத்தகைய கலை வடிவம் தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கிடையாது. இந்தியாவின் மற்ற மாநிலங்களில் கூட லிங்க வழிபாடு தான் நடைபெறுகிறதேயன்றி நடராஜர் வழிபாடு கிடையாது. மேலும் சிதம்பர இரகசியம் என்பது அருவ வழிபாடாகும். வெட்ட வெளியாகிய விண்ணாகிய ஆகாசமே இறைவன் என்பதை உணர்த்துவதாகும்.

தமிழனின் பண்பாடையும், கலாசாரத்தையும், ஆன்மீக பேருணர்வையும் உலகுக்கே பறைசாற்றும் ஒப்பற்ற கோவில் சிதம்பரம் நடராஜர் கோவிலாகும்.


சிவ நடனம்    அணு நகர்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் நடராஜர் ஆடிக் கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவம் என்ற கோலம்



"Cosmic dance" என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது.

அணுவின் அசைவும் நடராஜரின் நடனமும் ஒன்றாக கருதப்படுகிறது. அதனாலேயே "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்று திருமூலர் கூறியுள்ளார். God's Particle, Higgs Boson என்ற பலவற்றை கண்டாலும் அது நடராஜரை தொடர்புபடுத்துகிறது. திருமூலரும் அப்படியே கூறுகிறார்.

பல பில்லியன் டாலர்கள் செலவில், சேர்ன் (CERN) என்ற ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தில், பிரான்ஸ் - ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கு இடையே, 574 அடி ஆழத்தில் 27கி.மி நீளம் உள்ள சுரங்கப்பாதையில் Large Hadrons Collider ஒன்று உருவாக்கப் பட்டது. நடராஜர் தாண்டவமும் அணுவியக்கச் செயல்பாடும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டுள்ளது என்று நம்புவதால் அங்கே நடராஜர் சிலை விஞ்ஞானிகள் வைத்துள்ளனர். இது இந்துக்களிற்கு பெருமை தரும் விடயமாகும்.



## ஆடிஅமாவாசை தீர்த்தோற்சவம்

திருக்கோயில் சித்திர வேலாயுசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவம் யூலை மாதம் 09 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். முன்னதாக 8ம் திகதி வாஸ்து சாந்தி, கிராம சாந்தி இடம் பெறும். கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆடி அமாவாசைத் திருவிழாக்கள் தொடர்ந்து 17 தினங்கள் வெகு சிறப்பாக நடைபெறும். இறுதி நாளான 18ம் நாள் யூலை மாதம் 26ம் திகதி ஆடி அமாவாசை சமுத்திர தீர்தோற்சவம் ஆலயத்திற்கு முன்னாள் உள்ள சமுத்திரத்தல் இடம் பெறும். 27ம் திகதி பூங்காவனத் திருவிழாவும் 28ம் திகதி அபிஷேகப் பூஜையும் இடம் பெறும்.

களுதாவளை சுயம்பு இலிங்க பிள்ளையார் ஆலய மகோற்சவம் 25.06.2014 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04.07.2014 தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தத்தை வென்ற சித்தானைக்குட்டி சுவாமிகள்

## சித்தானைக்குட்டி சுவாமியின் 63வது குருபூஜை 03.08.2014

விபுலமாமணி வி.ரீ.சகாதேவராஜா

சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள். சித் என்றால் அறிவு, இவர்கள் சித்து விளையாட்டில் வல்லவர்கள் நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் மேலும் சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர் என்னும் பொருள்படுவதாக பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. சித்தர்கள் பொதுவாழ்க்கை நெறிக்கு உடன் படாதவர்களாகத் தங்களுக் கென்று தனி வாழ்வியல் வழி முறைகளை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்த இயற்கையோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியல்களைத் தந்தவர்கள்.

சித்தர்கள் இயற்கை கடந்த சக்திகள் உடையவர்கள், என்று சிலர் இயம்புவதுண்டு. எனினும் இவர்கள் உலகாயுத இயல்புகளை சிறப்பாக அறிந்து பயன்படுத்தினர் என்பதுவே தகும். சாதி, சமய சடங்குளை கடந்து, சமூகத்தில் பயனுடையவை எவை, என்பதைப் பிரித்தறிந்து அவற்றுள் புதுமைகளைப் புகுத்துகின்ற அறிஞர்களாகவும், சமுதாயத்தில் உள்ள ஏற்றதாழ்வுகளை சாதி, சமய மன மாச்சரியங்களை மாற்றக் கருதி சீர்திருத்த வாதிகளாகவும் விளங்கியவர்கள்.

இத்தகைய சித்தர்கள் வரிசையில் ஈழத்தின் சிதிதானைக்குட்டிச் சுவாமிகள் சிறப்புப் பெறுகின்றார். (ஆகஸ்ட் 1951) இவர் ஈழத்தில் ஆன்மீக சாதனைகளில் சிறந்து விளங்கிய சித்தர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் கோவிந்தசாமி என்பதாகும். தமிழ் நாடு, இராமநாதபுரம் மாவட்டம் பெருநாளி சமஸ்தானத் தலைவரின் புதல்வர். தமது சமஸ் தானத்தில் ஏற்பட்ட தொற்றுநோயைத் தடுக்க முயன்ற நவநாத சித்தரையும் பெரியானைக் குட்டி சுவாமிகளையும் சந்தித்தவர் அவர்களோடு 1920களில் கொழும்பு வந்தார்.

குருவான பெரியானைக்குட்டி சுவாமிகளின் ஆணைப்படி முன்னேஸ்வரம் சென்று அங்கு தங்கி பல சித்த சாதனைகள் புரிந்தார். தனது குரு சமாதியடைந்ததைத் தொடர்ந்து அவர் கதிர்காமம் சென்று திஸ்ஸமகாராமை என்ற இடத்தில் சிறிது காலம் தங்கி மட்டக்களப்பை அடைந்தார்.

அவர் கொழும்பு செட்டியார் தெரு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மன்னார், திருகோணமலை, களுவாஞ்சி குடி, கன்னங்குடா, பட்டிருப்பு, மண்டூர், கல்முனை, காரைதீவு, வீரமுனை, அகக்கரைப்பற்று, கோளாவில் பனங்காடு, திருக்கோவில், உகந்தை, திஸ்ஸமகரகம கதிர்காமம் போன்ற இடங்களில் நடமாடி பல சித்துக்ளைப் புரிந்தவர். முழங்காலுக்கு மேல் வேட்டி கட்டியிருப்பார். பச்சைக்கம் பனத்தால் உடலைப் போர்த்தியிருப்பார். கையில் ஒரு தடி, சிலவேளை பரிகாசத்துக்குரியவராக நடப்பதுண்டு. அருளுரைகளையும் அற்புதங்களையும் புரிந்ததன் வாயிலாக அவரது பெருமை வெளிப்பட்டது.

அவராடிய சித்துக்கள் சில

✠ கதிர்காம கந்தனாலயத்தில் தீப்பிடித் திரைச்சீலையை கல்லுமுனையில் நின்று கச்சையைப் பிழிந்து அணைத்தவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✠ மண்ணை கற்கண்டாக மாற்றியவர்
- ✠ மக்களின் கண்நோயைத் தீர்த்தவர்
- ✠ உடைந்த சாராயப்பீப்பாவை அடைத்துக் காட்டியவர்.
- ✠ பைத்தியத்தை ஒரே நாளில் மாற்றியவர்.
- ✠ இறந்த பெண்ணின் உடலை உயிர்பெற்றெழச் செய்தமை
- ✠ கதிர்காமத் திருவிழாவினை தமது உள்ளங்கையில் காட்டியவர்.
- ✠ கடலின் மேலால் சாவகாசமாய் நடந்தவர்
- ✠ சண்டோ சங்கரதாஸை இரும்பரசானக புகழ்பூக்கச் செய்தவர்
- ✠ சுவாமி விபுலானந்த அடிகளார் நோய்வாய்ப்பட்டிருந்தவேளை அருகிலிருந்து வருடிவிட்டு நோய் தீர்த்தவர்.
- ✠ நாயைக் கட்டதவன் என்னடா சாமி என்று சுவாமியுடன் பேசி ஆணவத்தை முற்றாக அகற்ற வேண்டுமென நல்வாக்கருளியவர்

காரைதீவிலே 1951ம் ஆண்டில் சமாதி அடைந்தார். அவருக்கு காரைதீவில் எழுப்பப்பட்ட ஜீவசாமாதி இன்று புதுப்பொலிவுடன் ஆலயமாக மிளிர்ந்துகொண்டிருக்கிறது. தினமும் தமிழில் பூஜை இடம் பெற்று வருகிறது. வெள்ளிக் கிழமைகளில் விசேட நிகழ்வுகள் பொங்கல்கள் இடம்பெறுவது வழக்கமாகி விட்டது. அடியார்களின் வரவும் அதிகரித்துக் காணப்படுகிறது. பௌர்ணமி தினங்களில் யாகமும் இடம்பெற்று வருகிறது. கூடவே அன்னதானமும் இடம்பெற்று வருகிறது. குருபூஜை தினங்களில் கூடும் பக்தர்களின் அளவுக்கு கணக்கே இல்லை.

சுனாமியின் போது இவ் வாலயத்தைச் சுற்றியிருந்த பிரகாரக் கோவில்கள் தாக்கப்பட்டுப் போயின. ஆனால் சுவாமியின் ஆலயம் மற்றும் அன்று காலை பக்தர்கள் சாத்தியப் பூக்கள் என்பன எந்த சேதத்திற்கும் உள்ளாகாமல் இருந்தமை அற்புதமே. இத்தனைக்கும் கடலுக்கு அருகாமையிலுள்ள ஆலய மென்ற காரணத்தினால் சுமார் 12 அடி கடல்நீர் இவ்வாலயத்தில் பாய்ந்தமை குறிப்பிடத்தக்கது.



அவருடைய சமாதி கோவிலில் ஆண்டு தோறும் ஆடிச்சுவாதி நட்சத்திரத்தில் அன்னாரின் நினைவாக குருபூசை சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும்.



யாகம் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி (மாதச்) சிறப்புக்கள்

ஆடி மாதம் ஆரம்பித்து விட்டாலே பண்டிகைகளும் களைகட்டிவிடும் அதிலும் இம்மாதம் அம்மனுக்கு உகந்த மாதம். பார்வதியின் தவத்தை மெச்சி பரமசிவன் ஆடிமாதம் அம்மன் மாதமாக இருக்க வேண்டும் என வரம் கொடுத்தார். சிவனுடைய சத்தியை விட அம்மனுடைய சக்தி ஆடி மாதத்தில் அதிகமாக இருக்கும். ஆடி மாதத்தில் மட்டும் சிவன் சக்திக்குள் அடக்கமாகி விடுகிறார் என்பது ஐதீகம்.

ஆடி மாதத்தில் நடைபெறும் முக்கியமான விழாக்கள் ஆடிப்பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிக் கார்த்திகை, ஆடி அமாவாசை, ஆடிப பௌர்ணமி, ஆடித் தபசு, ஆடிப் பெருக்கு, ஆடிப் பூரம், என்பன ஆடிப் பண்டிகை களாகும்.


ஆடிமாதப் பழமொழிகளாக “ஆடிப் பட்டம் தேடி விதை” “ஆடியில் காற்றடித் தால் ஐப்பசியில் மழை வரும்” “ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்” “ஆடிச் செவ்வாய் தேடிக்குளி அரைத்த மஞ்சள் பூசிக்குளி” “ஆடிக் கூழ் அமிர்தமாகும்” என்பன கூறப்படுகின்றன.

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் கிழமைகள் சிறப்பு வாய்ந்தவையாகும். இந் நாட்களில் பெண்கள் தவறாமல் எண்ணெய் தேய்துக் குளிக்க வேண்டும்.

ஆடி வெள்ளி அன்று வாசிலில் கோலமிட்டு பூஜையறையில் குத்து விளக்கேற்றி நிவேதனமாக பால்பாயாசம் அல்லது சர்க்கரைப் பொங்கல் வைத்து லலிதா சகஸ்ரநாமம், அம்மன் பாடல் களைப் பாடிப் பூஜை செய்தால் நல்ல பலன் கிட்டும். அன்று வயதுக்கு வராத பெண் குழந்தைக்கு ரவிக்கை, தாம்பூலம், சீப்பு, சிமிழ், கண்ணாடி வளையல் தந்து சிறப்பிக்க வேண்டும். அவர்களை அம்மனாகப் பாவித்து அமுதளிக்க வேண்டும்.

ஆடி மாதம் 18ஆம் திகதி ஆடிப் பெருக்கு விழாவாகக் கொண்டாடப்படும். இந்த நாளில் நதிகளில் நீர்ப் பெருக்கு அதிகரிக்கும் என்பது நம்பிக்கை. அந்த நாளில் நதிக்கரை மற்றும் கடற்கரைகளில் குடும்பத்தினருடன் அமர்ந்து இரவு உணவு உண்பதும் மரபாக இருந்து வந்துள்ளது. புதிதாக திருமணமான புதுமணத் தம்பதிகள் நதிக்கரையில் நிலாச் சோறு சாப்பிடுவார்கள். அன்றைய தினம் தாலி மாற்றிப் புதுத் தாலி அணிவதும் வழக்கம். திருமணமாகாத பெண்கள் விரைவில் திருமணமாக வேண்டும் என்று அம்மனை வேண்டிக் கொண்டு மஞ்சள் கயிற்றை கழுத்தில் கட்டிக் கொள்வார்கள்.

ஆடி வெள்ளியன்று மகாலட் சுமியை வழிபட்டால் நிறைந்த செல்வம் இல்லம் தேடி வரும் என்பது நம்பிக்கை ஆடி கடைசி வெள்ளிக்கிழமை மகாலட்சுமிக்கு உகந்த வரலட்சுமி விரதம் மேற்கொள்ளப்படுகிறது.



ஆடி மாதத்தில் சூரியனின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்காட்டியின் படி ஆண்டின் நான்காவது மாதம் ஆடி ஆகும். சூரியன் கர்க்கடக இராசியுட் புகுந்து அதைவிட்டு வெளியேறும் வரையிலான 31 நாள் 28 நாடி 12 வினாடி கொண்ட கால அளவே இம் மாதமாகும். வசதிக்காக இந்த மாதம் 31 நாட்களை உடையதாகக் கொள்ளப்படும். முற்காலத்தில் தமிழர் ஆடிப்பிறப்பை சிறப்பாகக் கொண்டாடுவர். ஆடிமாதம் தட்சிணாயனம் (தென் திசையேகல்) ஆரம்பமாகிறது. ஆண்டினை இரண்டு அயனங்களாக (கதிர் நகர்வு) பிரிப்பர். ஆடி முதல் மார்கழி வரையிலான தட்சிணாயனமும், தை முதல் ஆனி வரை உத்திராயனமும் (வடதிசை நகர்தல்) ஆகும். காலை வேளையில் கதிரவன் வடக்கிழக்கு நோக்கி நகர்தலை விட்டு தென்கிழக்கு திசை ஏகுவான். இந்து தொன்மவியலில் இது சூரியனின் தேர் திசை திரும்புவதாக குறிப்பிடப்படுகிறது. ஒன்று மழைக் காலத்திக் துவக்கத்தையும் மற்றொன்று கோடைக் காலத்தின் துவக்கத்தையும் குறிக்கிறது. இம் மாதத்தின் மிக சிறந்த இரு விடயங்களை பார்ப்போம்.

**ஆடிஅமாவாசை**

ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் சிறப்பானதுமான தினமாகும். ஆடிமாதத்தில் வருகின்ற அமாவாசை ஆடி அமாவாசை விரதம் எனச் சிறப்பு பெறுகின்றது. வானவியல் கணிப்பின் படி சூரியனும் சந்திரனும் ஒரே இராசியிற் கூடுகின்ற போதுள்ள காலம் அமாவாசை ஆகும். சூரியினைப் "பிதிர்காரன்" என்கிறோம். சந்திரனை "மாதிருக்காரன்" என்கிறோம். எனவே சூரியனும் சந்திரனும் எமது பிதா மாதர்களாகிய வழிபடு தெய்வங்களாகும். சூரிய பகவான் ஆண்மை, ஆற்றல், வீரம் என்பவற்றை எல்லாம் எமக்குத் தரவல்லவர். சந்திரன் எமது மனதுக்கு அதிபதியானவர். இதனால் மகிழச்சி, தெளிவான அறிவு, இன்பம், உற்சாகம் என்பவற்றை எல்லாம் தரவல்லவர். இத்தகைய பெருமைகளை எல்லாம் தருகின்ற சூரிய சந்திரனை தந்தை தாய் இழந்தவர்கள் அமாவாசை தினங்களில் வழிபாடு செய்வர்.

**ஆடி அமாவாசை தினத்தில் செய்ய வேண்டியவைகள்**

ஆடி அமாவாசை தினத்தில் அதிகாலை நித்திரை விட்டெழுந்து, தீர்த்தம் ஆடி பின்னர், சிவாலய தரிசனம், பிதிர்தர்ப்பணம் அன்னாதனம் செய்தல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. பிதிர்த் தேவர்களை சிரத்தையோடு வழிபாடு செய்து சிரார்த்தம் செய்வதால் பிதிர்களின் தோஷங்களில் இருந்து நீக்கமுறலாம் என்பது இந்துகளின் நம்பிக்கை. யாழ்ப்பாணத்து மக்கள் புராதன காலம் தொடக்கம் கீரிமலை நகுலேஸ்வரத்தில் தீர்த்தமாடுவார்கள். மட்டக்களப்பு வாழ் மக்களுக்கு மாமங்க பிள்ளையார் கோவில் அமிர்தகழியில் தீர்த்தமாடுவர். திருகோணமலை வாழ் மக்களுக்க கோணேஸ்வரர் ஆலயத்தில் தீர்த்தமாடி பிதிர் கடனைச் செலுத்துவர். ஆடி அமாவாசை காலத்தில் கடல் அல்லது புனித ஆறுகளில் நீராடி இறைவனை வழிபட்டால் பாவங்கள் நீங்கி விமோசனம் பெறமுடியும்.


**ஆடிப்பிறப்பு**


ஆடிப்பிறப்பினை பண்டிகையாக கொண்டாடும் மரவு ஈழத்துக்கேயுரியது. (ஆடிப்பெருக்கு தென் இந்தியாவில் பிரபலமானது) தமிழ் வருடத்தின் மத்திய மாதங்களில் ஒன்றான ஆடி முதலாம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. அதுவும் இலங்கையில் இந்துக்கள் தமிழ் நாட்காட்டியின் ஆடி மாத முதலாம் நாள் ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. முன்னோர்கள் சூரியனின் வட திசை மற்றும் தென் திசை நோக்கிய வருடத்தின் இருகாலப் பகுதியின் தொடர்புபடும் நாளை கணித்து ஆடிப்பிறப்பு நாளாகக் கொண்டாடி வருகின்றார்கள். அதாவது தட்சணாயண காலத்தின் தொடக்கதினம்.





பனங்கட்டி, கருப்பணி மற்றும் தேங்காய் என்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் உணவு வகைகள் ஆதிக்கம் செலுத்தும் தனித்துவமான பண்டிகை. பனங்கட்டி தேங்காய்த் துண்டுகள் கலந்த மாவின் சுவை சொட்டும் கூழ். சர்க்கரையின் (வெல்லம்) தித்திப்புடன் கொழுக்கட்டை இவையிரண்டும் ஈழத்தமிழர்களின் உணவுகள் குறிப்பாக சிறுவர்கள் கூழ் குடிப்பது அதற்குள் மிதக்கம் தேங்காய் துண்டுகளின் ருசிக்காக.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே!

இப்படி ஈழத்துக்கவி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிப்பிறப்பு பற்றி பாடியிருக்கிறார்.

ஈழத்துக்கேயுரிய "ஆடிப்பிறப்பு" க் கொண்டாட்டம் தன்னுடைய கடைசிக் காலங்களில் இருக்கின்றது. இன்று ஆடிப்பிறப்பு யாழ்ப்பாணம், மட்டக் களப்பு என்று தமிழ் பகுதிகளில் கோவில்களின் பூசைகளுடனும் ஓரிரு வீடுகளின் காய்ச்சப்படும் கூழுடனும் முடிந்து போகிறது. புலம் பெயர்ந்தவர்களில் பலருக்கு இன்று ஆடிப் பிறப்பு என்பதே தெரியாது.



இதுவெல்லாம் எம்முடைய தனித்துவ பாரம்பரியத்தை நாம் இலகுவில் எந்தவித குற்றவுணர்வுமின்றி மறக்கின்றோம் என்பதற்கு நல்லதொரு சான்று.

## அடுத்த இதழில் எதிர்பாருங்கள்


- கொக்கோகோலவும் கிறிஸ்தவமும்
- ஒரு பல்கலைக்கழகத்தின் மரணம்
- ம(ன)தமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கற்கும் அமெரிக்க குழந்தைகள்

## கற்றுத்தருவது பனைநிலம் தமிழ்ச்சங்கம்



சார்ல்ஸ்டன் (யு.எஸ்)

தமிழ் மொழியை அமெரிக்கர்களுக்கும் அறிமுகப்படுத்தும் முயற்சியில் சார்ல்ஸ்டன் பனை நிலம் தமிழ்ச் சங்கத்தினர் முயற்சி எடுத்து வருகிறன்றனர். தமிழ் வரலாற்றில் மிக முக்கிய முயற்சியாக இது பார்க்கப் படுகிறது. அமரிக்காவில் வசிக்கும் தமிழர்கள் உட்பட இந்தியர்களுக்கு தாய் மொழியும் ஆங்கிலமும் தெரிந்திருக்கும். அதே போல் பெரும்பாலான லத்தீன் இனத்தவர்கள் ஸ்பானிஷமும் ஆங்கிலமும் அறிந்திருப்பார்கள். சீனர்களுக்கு சீன மொழியும் ஆங்கிலமும் தெரியும்.

அமரிக்கர்களை ஒற்றை மொழியினர் (Unilingual) என்று பரவலாக அழைப்பதுண்டு. அதாவது அவர்களுக்கு ஆங்கிலம் மட்டுமே தெரியும் மொழியின் பெயரால் அங்கு சண்டை கிடையாது

**இப்போதுதான் இரட்டை மொழி**

சமீப காலமாக பெரும்பாலான பள்ளிகளில் இரட்டைமொழி என்ற அடிப்படையில் ஸ்பானிஸ் மொழியும் கற்றுத் தரப்படுகிறது, தவிர தனிப்பட்ட முறையில் கற்று வரும் குழந்தை களுக்கு சீனம் ஃப்ரெஞ்சு மொழி உட்பட வேறு மொழிகளுக்கும் பள்ளியில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் மொழிக்கு இப்படிப்பட்ட மதிப்பெண்கள் பெறு வதற்கு தமிழ் பள்ளிகளும், அமரிக்க தமிழ்க் கல்விக் கழகமும் முயற்சிகள் எடுத்து வருகின்றன.

**தமிழ் மொழியும் கற்றால் என்ன?**

இந்நிலையில் உலகிலேயே தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை அமெரிக்கர்களுக்கும் கற்றுக் கொடுத்தால் என்ன? என்ற சிந்தனையில் பனை நிலம் தமிழ்ச் சங்கத்தினர் முயற்சிகள் எடுத்து வருகின்றனர். அதாவது தமிழ்க் குழந்தைகள் தவிர தமிழ் பேசும் அமெரிக்கர்களையும் உருவாக்க வேண்டும் என்பது தான் இதன் அடிப்படை நோக்கமாகும்.

முதற்கட்டமாக பள்ளியில் ஒற்றை மொழி அமொரிக்கர்கள் (Unilingual Americans) என்பதை தற்கால அமெரிக்கக் குழந்தைகள் விரும்பு வதில்லை. கூடுதலாக ஏதாவது ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பு கிறார்கள். இதில் ஸ்பானிஷ் அல்லது சீன மொழிகள் தான் அவர்களுடைய முதல் தேர்வாக இருக்கிறது. தமிழ்மொழி குறித்து இவர்கள் பெரிதாக அறிந்திருக்கவில்லை. தொன்மையான சிறப்புக்கள் மற்றும் தமிழர்களின் பண்பாடு, காலாசாரம் பற்றியும் எடுத்துரைக்கும் முயற்சியை பனை நிலம் தமிழ்சங்கம் முன்னெடுத்துள்ளது. கூடவே கோலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையவும், கும்மிப் பாடல்கள் பாடவும், வணங்கள் பூசவும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

பனைநிலம் தமிழ்ச் சங்கத்தில் ஆக்லே ஆல் பள்ளி மற்றும் பியூஸ்ட் அக்கடமி மாணவ மாணவியர்களுக்கு தமிழ் மொழி மற்றும் தமிழர்கள் பண்பாடு குறித்த பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. பனை நிலம் தமிழ்ச் சங்கத்தின் ஹரி நாராயணன் வேட்டி சட்டையில் இந்த பாடங்களை நடத்தினார். நிகழ்ச்சியில் 250 அமெரிக்க மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். திருவள்ளுவர் திருக்குறள், தஞ்சை பெரியகோவில் மற்றும் இட்லி தோசை உட்பட தமிழ்ர்களின் பாரம்பரியத்தை பற்றிய விபரங்களை சில மாணவர்கள் குறிப் பெடுத்துக் கொள்ளவும் செய்தார்கள். அத்தனை மாணவ மாணவியர்களுக்கு மத்தியில் ஹரி நாராயணன் தமிழ்ர்களின் பாரம்பரிய உடையான வேட்டி சட்டையில் வந்திருந்தது வகுப் பெடுத்தது.

தமிழ்ப் பள்ளியில் அமெரிக்க மாணவர்கள் இதன் தொடர்ச்சியாக அமெரி க்ககுழந்தை களை தமிழ்ப் பள்ளிக்கு அழைத்து தமிழ் கற்றும் கொடுக்கும் முயற்சியில் ஈடுபடப் போவதாக சங்கத் தலைவர் சந்தோஷ் மணி தெரிவித்தார். ஏற்கனவே பரிட்சார்த்த முறையில் கடந்த ஆண்டு சில மாணவர்களை தமிழ்ப் பள்ளியில் சேர்த்துள்ளார்கள். தொடர்ந்து இதை நடை முறைப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.



வேற்று மொழியினருக்கும்

தலைவர் சந்தோஷ் மணி கூறுகையில் நம்மொழி பேசும் மக்கள் தொகையை அதிகரிக்க வேண்டுமென்றால் வேற்று மொழியினருக்கும் நாம் தமிழ் கற்றுத்தர வேண்டும். இன்னொரு மொழி தேடும் ஆர்வமுள்ள அமெரிக்கக் குழந்தைகள் அதற்கு சரியானவர்கள். எழுதப்படித்து பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தமிழ் மொழி மென்மேலும் தழைத்தோங்கும் என்றார்.

தமிழ் பிள்ளைகள் தமிழை மறந்தாலும், ஒருவேளை தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தமிழர் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் தமிழில் பேச மறுக்கும் காலம் வந்தாலும் அமெரிக் காவில் பரவலாக தமிழ் பேசும் காலம் வந்துவிடும் போலிருக்கின்றது. தமிழ் குழந்தைகள் ஆங்கிலத்தில் பேசி ஆர்சரியப்படுத்தும் வேளையில், அமெரி க்கர்களின் குழந் தைகள் தமிழில் பேசக்கூடிய நாட்கள் வெகு அருகில் இருப்பதற் கான நம்பிக்கை பிறந்து விட்டது. எது எவ்வாறாயினும் தமிழர்கள் தமிழை எங்கும் பேச வேண்டும், எதிலும் பேச வேண்டும். அதே நேரம் ஏனைய மொழிகளை கற்றாலும், அவற்றை தமிழில் கலக்காது தமிழை தனித்துவத்துடன் பேசப்பழக வேண்டும். விரதமாக கைகொள்ள வேண்டும். எந்த ஊரில் இருந்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ் பிள்ளைகளை தமிழ் பேச ஊக்குவிக்க வேண்டும். செய்வோமா? தமிழை காப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடம் கற்றுக்கொள்ளலாமா? (பாடம் 01)

சிவசுதர்சனன்

கணபதி வழிபாடு

ஓம் ஏக தத்புருஷாய வித்மஹே : வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

ஓம் என்கிற பிரணவப் பொருளினுள் உள் அடங்கிய எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றன. சித்தர்களின் தலைவனாம் அகத்திய மக ரிஷியை மனதில் தியானித்து ஜோதிடப் பாடத்தை தொடங்குகிறேன்.

ஜோதிடக் கலையை எப்பாடு பட்டேனும் காப்பாற்றுவேன், என்று சூளுரை செய்து தொடங்கப்படும் முயற்சி அல்ல இது. ஜோதிடத்தின் மேல் நம்பிக்கை இல்லாதவர்களை திருத்தி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதும் என் நோக்கமல்ல. யாரும் யாரையும் மாற்ற முடியாது. தானே உணர்ந்து தன்னை மாற்றிக் கொண்டால் தவிர எந்த மாற்றமும் நிரந்தரம் ஆகாது.

எனக்கு தெரிந்த ஜோதிட ஞானத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் முயற்சியே இனி வரவிருக்கும் தொடர் கட்டுரைகள். இதில் உங்களுக்கு ஏற்படும் நிறைகள் அனைத்திற்கும் காரணம் என் குருவருள். ஏதேனும் பிழைகள் இருப்பின் அவை முழுக்க அடியேனுடையது. பொறுத்துக் கொள்ளவும்.

மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இன்னும் கற்றுத் தெளிய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இறைவன் அருளும் என் குருவின் அருளும் எனக்கு தேவையான ஞானம் தந்து தவறான கருத்துக்களை கூறாமல் இருந்து காக்கும் என்று நம்புகிறேன்.

ஜாதகம் :

பூமியில் பிறக்கும் எந்த ஒரு ஜாதகருக்கும் அவரவர் பூர்வ ஜென்ம வினைகளே 9 கிரகங்களாகவும், அவை அமரும் வீடுகளையும் தீர்மானிக்கிறது.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது. என்பனவே அவை

| எண் | கிரகங்களின் பெயர்கள் | ஆங்கிலப் பெயர்கள் |
|---|---|---|
| 1 | சூரியன் | The Sun |
| 2 | சந்திரன் | The Moon |
| 3 | செவ்வாய் | Mars |
| 4 | புதன் | Mercury |
| 5 | குரு | Jupiter |
| 6 | சுக்கிரன் | Venus |
| 7 | சனி | Satum |
| 8 | ராகு | Dragon's Head |
| 9 | கேது | Dragan's Tail |

எந்த ஒரு ஜாதக கட்டத்திலும் - 12 கட்டங்கள் இருக்கும். இவை 12 வீடுகள் என்பர். 12 ராசிகள் என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

மேலிருந்து இடதுகைப் பக்கத்திலிருந்து இரண்டாம் கட்டத்தை பாருங்கள். அதை முதல் வீடு என்று கொள்ளுங்கள். இப்போது கடிகாரச் சுற்றுப்படி 1, 2, 3 என் குறியுங்கள். அமாத்தம் 12 வீடுகள் வரும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் 30 பாகை மொத்தம் $36^0$ பாகை இதனுடன் ஒரு சுற்று முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| எண் | ராசியின் பெயர் | ஆங்கிலப் பெயர் | தூர அளவு |
|---|---|---|---|
| 1 | மேஷம் | Aries | $0$ to $30^0$ |
| 2 | ரிஷபம் | Taures | $30^0$ to $60^0$ |
| 3 | மிதுனம் | Gemini | $60^0$ to $90^0$ |
| 4 | கடகம் | camcer | $90^0$ to $120^0$ |
| 5 | சிம்மம் | leo | $12^0$ to $160^0$ |
| 6 | கன்னி | Vigo | $150^0$ to $180^0$ |
| 7 | துலாம் | Libra | $180^0$ to $210^0$ |
| 8 | விருச்சிகம் | Scorpio | $210^0$ to $240^0$ |
| 9 | தனுசு | Sagittanus | $240^0$ to $270^0$ |
| 10 | மகரம் | capricoen | $270^0$to $300^0$ |
| 11 | கும்பம் | Aquarius | $300^0$ to $330^0$ |
| 12 | மீனம் | Pisces | $330^0$ to $360^0$ |

மொத்தம் 27 நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் 4 பாதங்கள் உள்ளன. ஆக மொத்த 21 x 4 = 108 நட்சத்திர பாதங்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் 9 பாதங்கள் என, 108 நட்சத்திரக் கால்கள் 12 வீட்ல் அமர்ந்திருக்கும்.

முதல் வீடான மேஷத்தில் அஸ்வினி (4 பாதங்கள்), பரணி (4 பாதங்கள்), கார்த்திகை (1 பாதம் மட்டும்) ஆக மொத்தம் - பாதங்கள் இருக்கும்.

கார்த்திகை நட்சத்திரத்தி இருக்கும், மீதி 3 பாதங்கள் ரிஷபத்தில் இருக்கும். ரோகினி (4 பாதங்கள்), மருக சீரிஷத்தில் 2 பாதங்கள் மட்டும் வரும்.

மிருக சீரிஷத்தில் வரும் மீதி 2 பாதங்கள் அடுத்த ராசியான மிதுனத்தில் வரும். இதைப் போல மொத்தம் உள்ள 27 நட்சத்திரங் களையும் வகைப்படுத்த வேண்டும்.

ராசிகள் நட்சத்திரங்கள்

மேஷம் - அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் முடிய

ரிஷபம் - கார்த்திகை 2ஆம் பாதம் முதல் ரோகினி, மிருகசிரிஷம் 2ஆம் பாதம் முடிய

மிருனம் - மிருகசிரிஷம் 2ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய

கடகம் - புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய

கன்னி - உத்திரம் 2ஆம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய

துலாம் - சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய

விருச்சிகம் - விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய

தனுசு - மூலம், பூராடம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய

மகரம் - உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய

மீனம் - பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய

| | | |
|---|---|---|
| 1. அஸ்வினி | 10. மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 20. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்திரம் | 21. உத்திராடம் |
| 4. ரோகிணி | 13. அஸ்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரஷம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25. பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்திரட்டாதி |
| 9. ஆயிலியம் | 18. கேட்டை | 27. ரேவதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்சத்திர அதிபதிகள் :**

மேலே கூறிய படி, 27 நட்சத்திரங்களையும் ஒன்றின் பின் ஒன்றாக எழுதுங்கள்.

ஒவ்வொரு வரிசைக்கும் ஒவ்வொரு நவகிரகம் அதிபதியாக இருப்பார்.

**ராசி அதிபதிகள் :**

ஒவ்வொரு ராசியும், ஒரு நவகிரகத்தின் வீடு ஒரு சிலருக்கு இரண்டு வீடு நிழல் கிரகம் எனப்படும். ராகு கேதுக்கு சொந்த வீடு இல்லை.

இப்போ நீங்க செய்ய வேண்டியது என்னவென்றால் ... மேலே சொன்னதன் படி ஒன்பது கிரகம், 12 ராசி, 27 நட்சத்திரம் எந்த நட்சத்திரத்துக்கு எந்த ராசி இதை எல்லாம் நன்றாக மனதிலே பதியுங்கள். அப்போது தான் எமக்கு பின்னால் வரக்கூடிய பாடங்கள் நன்றாக புரியும்.

நல் நினைவாற்றல் எந்த ஒரு சோதிடருக்கும் முக்கியம். அதுக்காக பார்க்கிற ஜாதகம் அனைத்தையும் மனசிலே பதிய வைக்காதீர்கள். உங்களுடைய ஜாதகம் தவிர வேற ஜாதகமும் உங்களுக்கு ஞாபகம் இருக்கக் கூடாது.

-தொடரும் -



# கதிர்காம கந்தனாலய ஆடிவேல் விழா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம கந்தனாலய ஆடிவேல்விழா உற்சவம் ஜூன் மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 13ஆம்திகதி மாணிக்க கங்கையிலிடம் பெறும் தீர்த்தோற் சவத்துடன் நிறைவடையவுள்ளது. அக் காலப்பகுதியில் இரவுப் பெரஹரா இடம்பெறும் என கதிர்காம தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே சசீந்திர ராஜபக்ஸ தெரிவித்தார்.

பந்தல் கால் நாட்டுவிழா இம்மாதம் 15ம் திகதி அதிகாலையில் இடம்பெற்றது இது இடம்பெற்று 45 தினங்களின் பின்பே பெரஹரா இடம்பெறவுள்ளது என்றும் பஸ்நாயக்க நிலமே சசீந்திர ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசனும் அர்த்தமுள்ள இந்துமதமும்

**கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டும் அவரின் உயர்ந்த தமிழ், இந்து சமய பற்றிற்க்காவும் தனது காலத்தில் நாஸ்திகம் பேசினால் மட்டுமே பிழைப்பு நடத்த முடியும் என்ற சூழலிலும் தனது கொள்கையை காத்து தமிழையும் சமயத்தையும் போற்றிய அந்த உயர்ந்த பண்பிற்காகவும் அவரை இந்த மதம் நினைவு கூர்ந்து இந்த சிறப்பு ஆக்கம் உங்களுக்காக.**

முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பாலமாக விளங்குவது நமது தொன்மையான தமிழ் மொழி. காலந்தோறும் ஆற்றல் மிகு கவிஞர்களும் புலவர்களும் எழுத்தாளர்களும் தோன்றி தமிழின் இளமைப் பொலிவைக் காத்து வந்துள் ளனர். அவர்களில் முக்கியமான இடம் வகித்து வெள்ளித் திரையிலும் மெல் லிய தமிழை வாழ வைக்க முடியும் என்று நிரூபித்தவர். கவியரசர் கண்ண தாசன் "கவியரசு" எனப் போற்றப் பட்டவர். காரை முத்துப் புலவர், வணங்காமுடி, கமகப் பிரியா, பார்வதி நாதன், ஆரோக்கியசாமி எனப்பல புனைபெயர்களால் சிறப்பிக்கப் படுகின்றார்.



தமக்கென தனிப்பாணியை உருவாக்கிக் கொண்டவர். அரசியலில் ஆன்மீகத்திலே அவர் வாழ்வில் நீண்ட மாற்றங்களுக்கேற்ப அவர் சிந்தனைப் போக்கில் மாற்றங்கள் நேர்ந்தன. அவற்றை ஒட்டி அவர் கவிதையும் முரண்பாடுகளைக் கண்டு வளர்ந்தது. தமிழ் வழங்கும் இடங்களில் எல்லாம் அவரைச் சிறப்பாக திகழ வைத்தவை அவர் எழுதிய ஆயிரக்கணக்கான திரையிசை ப்பாடல்களே.

தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம் செட்டிநாடுப் பகுதியின் சிறுகூடற் பட்டி யில் பெற்றோர் சாத்தப்பனார் விசாலாட்சி ஆச்சிக்கு 1927 யூன் 24ல் பிறந் தார். முத்தையா பின்னாளில் கண்ணதாசன் ஆனது சுவாரசி யமான கதை. அதை அவரது வனவாசம் நூலினைப் படித்தால் உணரலாம். சிறு கூடலப்பட்டியில் ஆரம்பக்கல்வியும் அமராவதி புது உயர் கல்விப் பள்ளியல் 08 வகுப்பு வரையும் படித்தார். 15 வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங் கினார். 17 வயதில் அவரது முதல் கவிதை வெளி வந்தது.

ஆரம்ப காலத்தில் பகுத்தறிவு என்ற போர்வையில் நடந்த நாஸ்திக பிரசாரத்தில் மூழ்கிய கண்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலுள்ள ஏமாற்று வித்தையை உணர்ந்து ஆத்திகப்பாதைக்கு திரும்பினார். ஆரம்ப காலத்தில் தி.மு.க தலைவர்களுள் ஒருவராக விளங்கிய கண்ணதாசன் அரசியலில் துரோகமும் சுயநலமும் கோலோச்சுவது கண்டு விரக்தியுற்று 1960 – 1961 ஆண்டுகளில் அதிலிருந்து விலகினார். கண்ணதாசனின் ஆளுமை என்பது அவரது சாகாவரம் பெற்ற இலக்கியங்களில் தான் நிலை கொண்டுள்ளது. நான்காயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட திரையிசைப்பாடல்கள் அற்புதமான துள்ளுத்தமிழ் நடையுடன் கூடிய நூல்கள் கட்டுரைகள், சிறுகாப்பியங்கள், நவீனங்களை எழுதியது கண்ணதாசனின் சாதனை. தமிழில் புதிய மறுமலர்ச்சியை பாரதிக்கு பிறகு ஏற்படுத்தியவர் கண்ணதாசனே. இவரது "சேரமான் காதலி என்ற புதினம் 1980ல் சாஹித்ய அகாதெமி விருது பெற்றது. "குழந்தைக்காக" என்ற திரைப்படத்திற்கு எழுதிய திரை வசனத்திற் காக (1961) இவருக்கு தேசிய விருது கிடைத்தது. திரைப் பாடல்களிலும் செந்தமிழ் துள்ளி விளையாடுவது கண்ணதாசனின் சிறப்பு. பண்டைய இலக்கியங்களில் அவருக்கு இருந்த தேர்ச்சி திரை பாடல்களில் வெளிப்பட்டது. சந்தமும் செந்தமிழும் எந்த சிரமும் இன்றி கைகோர்த்தன. கண்ணதாசனின் பாடல்களில் அவர் ஆசுகவியாகவே திகழ்ந்தார்.

அரசியல்வாதி, திரையிசைக் கவிஞர், வசனகர்த்தா, எழுத்தாளர், நடிகர், படத்தயாரிப்பாளர் என்ற பன் முகங்களுடன் பத்திரிகையாசிரி யராகவும் கண்ணதாசன் விளங்கினார். அவர் நடத்திய சண்டமாருதம், திருமகள், முல்லை, திரையொலி, மேதாவி, தென்றல் திரை கண்ணதாசன் ஆகிய இதழ்கள் தமிழ் இதழ்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக் கவையாக இன்றும் பேசப்படுகின்றன. குறிப்பாக தென்றலில் அவர் தீட்டிய கூர்மையான அரசியல் நையாண்டியுடன் கூடிய உருவகக் கட்டுரைகள் அக்காலத்தில் பெரும் விழிப்புணர்வையும் பர பரப்பையும் உருவாக்கினர். தமிழகத்தில் நாத்திக வாதமும் பிரிவினை வாதமும் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் அதே பிரசார காலத்தில் இருந்து விடுபட்டு தேசியத்தையும் தெய்வீகத்தையும் உயர்த்தி பிடித்த குரல் கவிஞர் கண்ணதாசனின் குரல்.



இவ்வாறான தொரு வாழ்க்கையைக் கொண்ட கண்ணதாசன் அவர்கள் தமது உயர் படைப்பாக கருதிய அர்த்தமுள்ள இந்து மதம் என்னும் பத்து பாகங்களைக் கொண்ட புத்தகத்தை எழுதிய தானது ஒரு திருப்பு முனையான சம்பவம் ஆகும்.

சான்டோ சின்னப்பதேவரும் கண்ணதாசரும் ஒரு படப்பிபடிப்பு சம்பந்தமாக காரில் போய்க்கொண்டிருந்த போது மிக மேசமான விபத்து ஏற்பட்டது. அதில் சின்னப்ப தேவருக்கு அவ்வளவாக காயம்இல்லை. ஆனால் கண்ணதாசனுக்கு படுகாயம் ஏற்பட்டு நினைவிழந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் மருத்துவ மனையில் இருந்தார்.

காஞ்சிப் பெரியவரிடம் மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்ட தேவர் அவர்கள் சிவஸ்தானம் எனப்படும் பிரம்மபுரீசுஸ்வரர் கோவிலில் பெரிய வரைப் பார்த்து வணங்கி விபத்து நேர்ந்து விட்டது என்று சொன்ன மாத்திரத்தில் கண்ணதாசன் எப்படியிருக்கின்றான் என்று பெரியவர் கேட்க அதிர்ந்து போனார் தேவர். கண்கள் கலங்க வியப்பும் வருத்த முமாய் அவர் படுகாயத்துடன் நினைவு இல்லாமல் மருத்துவ மனையில் இருக்கிறார் என நா தழுதழுப்பக் கூறினார்.

தேவரின் கவலையை உணர்ந்த பெரியவர் சரி கவலைப்படாதே இந்த வீபூதியைக் கொண்டு போய் அவன் நெற்றியில் இட்டு வாயிலும் சிறிதளவு போடு மீதியிருப்பதை அவன் தலைய ணைக்கு கீழ் வைத்து விடு என்று தனது திருக்கரங்களால் மடித்து தர தேவர் விதிர் விரித்து பெரியவரை மறுத்து பேசவும் துணிவின்றி தயங்க மீண்டும் பெரியவரின் கட்டளைக் கிணங்க தயக்கத்தோடு கைநீட்டி வீபூதியைப் பெறுகின்றார்.

தேவரின் தயக்கத்திற்கு காரணம் கண்ணதாசன் நாத்திகத்தில் தீவிர ஈடுபாடும் கொண்டு திராவிட கட்சிகளின் சார்பில் பிரமாணர்களையும் சனாதன தர்மத்தினை யும் நாக்கில் நரம்பில்லாதது போல் மேடையில் பேசி வந்த காலகட்டம் அது. விபத்து நடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தான் காஞ்சிபுரம் சங்கர மடத்திற்கு எதிரேலே நடந்த கூட்டத்தின் மேடையில் படுபயங்கரமாக பேசி மடாதிபதிகளை இழிவுபடுத்திப் பேசினார். எனவே அவரிடம் போய் இந்த வீபூதியை எப்படிக் கொடுப் பது என்பது தான் தேவரின் பெரிய தயக்கமாக இருந்தது.

ஆனால் முக்காலமும் உணர்ந்த பெரியவர் தேவரின் மனத்தயக்கத்தை உணர்ந்து தயங்காமல் கொண்டு போய் பூசு. சூரியனே சில சமயம் மேகம் மறைப்பது போல் நாத்திக மேகம் இதுவரை அவனை மறைத்திருந்தது, இனி அவன் சூரியனாக திகழ்வான். அவன் எப்பேர்ப்பட்ட பரம்பரையைச் சேர்ந்தவன் தெரியுமா? கோவில் திருப்பணியை செய்வதற்கே பிறந்தவர்கள் போல் திகழ்ந்தவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். வரதராஜாப் பெருமான் கோவிலில் கோபுர திருப்பணியைச் செய்தவர் கண்ணதாசனின் கொள்ளுத் தாத்தா.

ஏகாம்ப நாதர் கோவிற் திருப்பணியைச் செய்தவர் கண்ண தாசனின் தாத்தா. காமாக்ஷி கோயில் திருப்பணியைச் செய்தவர் கண்ண தாசனின் தகப்பனார். இப்பபுரியறதா? என திருவாய் மலர்ந்தருளினார்.

தேவர் மனந்தெளிந்தவராய் பெரியரை வணங்கி விடை பெற்று நேராக மருத்துவமனைக்குச் சென்றார். நினைவிழந்து படுத்திருந்த கண்ண தாசனின் நெற்றியில் வீபூதியை பூசிவிட்டு சிறிது வீபூதியை வாயில் விட்டு மீதியை தலையணையின் கீழ் வைத்து விட்டு வீடு திரும்பினார். அவர் சிந்தனையெல்லாம் கண்ணதாசனின் நினைவு திரும்பி நடந்ததை அறிந்து என்ன சொல்வாரோ என்று நினைத்தது.

மறுநாள் தேவர் மருத்துவமனை சென்று கண்ணதாசனின படுக்கையை சற்றே படபடக்கும் நெஞ்சோடு நெருங்கிய போது கண்ணதாசன் நினைவு திரும்பி கண் வழித்திருந்தார். தேவரைப் பார்த்தவுடன் வாங்க எத்தனை நாளே படுக்கையில் இருக்கேன். கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியை எடுத்துக் கொடுங்களேன். என் முகத்தைப் பார்க்கணும் என்றார்.

நேற்று இட்ட வீபூதி இன்னும் நெற்றியில திகழ தேவர் தயங்கிய படியே தந்த கண்ணாடியில் தன் முகம் கண்ட கண்ணதாசன் இததென்ன வீபூதி என்று தேவரை எறித்துப் பார்க்க வேறு வழியின்றி வந்தது வரட்டும் எனத் தேவர் தான் பெரியவரைப் பார்த்ததையும் பெரியவர் ஆசிரிவாதம் செய்து வீபூதி கொடுத் ததையும் சொல்ல கண்ணதாசனின் விழிகளில் அருவி நீர் கொட்டியது கண்ணீர். திகைத்து நின்ற தேவரின் செவிகளில் தேனாகப் பாய்ந்தது.

கண்ணதாசனின் வார்த்தைகள் எனக்காக என்னிடமா, இவ்வளவு கருணை போன வாரம் தான் அவ்ரை ஐயோ என வாய்விட்டுப் புலம்பி அழுததோடு தேவரிடம் ஒரு வேண்டுகோளையும் சமர்ப்பித்தார். எனக்கு உடல் நலம் ஆகி மருத்துவமனையில் இருந்து வெளியேறும் சமயம் நான் வீட்டிற்கு செல்ல மாட்டேன். இந்தப் பாவியிடம் கருணை பெற்ற அந்த மகானிடம் முதலில் என்னைத் தயவு செய்து அழைத்துச் செல்லுங்கள். என மனம் உருகி வேண்டினார்.

கண்ணதாசன் வேண்டிய படியே நல்ல சந்திப்பும் பாவமன்னிப்பும் நடந்தது. மாறியது மனம் நன்றி ஊறியது தினம். வீறிட்டு வெளிவந்தது ஒரு கவிதை. அக்கவிதையை வெளியே எடுத்துக் கொண்டு பெரியவரை நேரில் கண்டு வணங்கி கவிதையை சமர்ப்பித்தார்.

கவிதை வரிகளைக் கண்ட பெரியவர் கண்ணதாசனை கனிவோடு நோக்கி அனந்தகோடி அற்புத லீலா சாகித்ய மாயமானுஷாய நமோ நம' அர்த்த நாரி திருவண்ணமலை சேஷாத்ரி மகானுக்கல்லவா இது பொருந்தும் என்று அருளாசி கூறி "அங்கிங்கெனதாபடி எங்கும் நிறைந்திருக்கும் நிர்மலப்பொருள் ஞானசூரியனாம் மதத்தின் பெருமையை எழுது என்று திருவாய் மலர்ந்தருள அக்கணமே கண்ணதாசனின் மனதில் "அர்த்தமுள்ள இந்துமதம்" அழகாய் அரும்பி பலநாள் உழைப்பில் இதழ் விரித்து மணம் வீசியது. இன்று எங்களிடையே பல கண்ணதாசன்கள் உள்ளனர். அவர்களும் உண்மையறிந்து திருந்த இறைவன் துணை புரிய வேண்டும்.

## செய்திவலம்

### பண்டாரியாவெளி ஸ்ரீநாகதம்பிரான் வருடாந்த மகோற்சவம்

பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் (நாககட்டு) ஆலய வருடாந்த மகோற்சவம் 27.06.2014 ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்று 04.07.2014 அன்று உற்சவம் நிறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை


# வண்ணத்துப்பூச்சி கற்றுத்தந்த பாடம்

இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த மனிதன் ஒருவன், ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த வண்ணத்துப்பூச்சியின் கூட்டுப் புழுவைக் கண்டான்.

அந்தக் கூட்டுப்புழுவின் கூட்டில், ஒரு சிறு விரிசல் ஏற்படுவதைக் கவனித்தான். சில நிமிடங்கள் கழித்து அந்தக் கூட்டில் இருந்து வண்ணத்துப்பூச்சி ஒன்று வெளிவர முயற்சிப்பதைப் பார்த்தான். அந்த வண்ணத்துப்பூச்சி சில மணி நேரங்களாக வெளியே வரப் போராடிக்கொண்டு இருந்தது. கருணை உள்ளம் கொண்ட அந்த மனிதன், ஓர் ஊசியை எடுத்து கூட்டின் துவாரத்தில் குத்தி அதைப் பெரிதாக்கி, வண்ணத்துப்பூச்சி வெளியே வர உதவி செய்தான். சில நொடிகளில் வண்ணத்துப்பூச்சி சுலபமாக வெளியே வந்தது. ஆனால் அதன் உடல் பெருத்திருந்தது. சிறகுகள் விரியாமல் உடம்போடு ஒட்டியிருந்தன. அது பறக்கமுடியாமல் கீழே விழுந்தது. ஊர்வதற்கு முயற்சித்தது வண்ணத்துப்பூச்சி பறந்துவிடும் என்று நம்பிக்கையோடு காத்திருந்தான் அந்த மனிதன். ஆனால், அது பறக்கவில்லை பருத்த உடலுடன் சிறகுகள் விரியாமல் தரையில் தவழ்ந்து கொண்டுதான் இருந்தது.

கூட்டுப்புழு பருவத்தில் உருவாகும் வண்ணத்துப்பூச்சி, தன் சுயமுயற்சியால் கூட்டைக் கிழித்துக் கொண்டு வெளியே வரும்போதுதான், அதன் வயிற்றுப் பகுதியிலுள்ள நீர் வெளியேறி, சிறகுகளுக்குச் சக்தி கிடைத்து. தானாகவே பறக்கும் திறன் கிடைக்கும் இது இறைவன் வகுத்த நியதி. அந்த வண்ணத்துப்பூச்சியானது தனக்குக் கிடைக்கும் புதிய பரிமாண வளரச்சிக் காகவும், சுதந்திரத்துக் காகவுமே போராடுகிறது என்பதை, பாவம் அந்த மனிதன் உணரவில்லை.


வண்ணத்துப்பூச்சிக்கு உதவி செய்து அதன் வாழ்வை கொடுத்தது போல, உதவியை எதிர்பார்த்தும் உதவியை வழங்கியும் நாமும் சிலரை பறக்க முடியாத வண்ணத்துப்பூச்சி ஆக்கி விடுகிறோம்.



மதம் மாற அந்த நாள் தொட்டு இந்த நாள் வரை வழங்கப்படும் உதவிகளும், திருமணத்திற்கு என வழங்கப்படும் சீதனமும், இந்த வகையே. இரண்டினாலும் இந்துக்களுக்கு அழிவு தான் முன்னைய தால் இந்துக்கள் மதம் மாறி எமது கலை, கலாசாரம், இனத் தொகை என்பன அழியும். பின்னையதால் முதிர் கன்னிகளும், சீதனத்தை எதிர்பார்த்தே தன் சொந்தக்காலில் நிற்க மறந்து வயதாகி வாழ்வை தொலைக்கும் இளைஞர்களும் அதிகரிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதனால் வயதாகி திருமணம் செய்வதும், பின் குழந்தைக்காய் ஏங்குவதும் கொடுமை. அதனை விட கொடுமை சீதனம் முழுவதையும் பிள்ளை பெற்றுக் கொள்ள செலவிட்டு விட்டு குழந்தையை வளர்க்க சிரமப்படுவது ஆகவே பொருத்தமற்ற உதவிகளே வீண் என உணர்வோமா இந்துக்களே?

பிள்ளைக்கு நல்லகல்வியும், திடமான தேகமும், உறுதியான மனமும், ஒழுக்கமும், சமய, சமூக பற்றும் பெற்றோரை மூத்தோரை மதிக்கும் பண்பும் என உயர் குண நலன் கொண்ட உயர்வான ஒரு வாழ்க்கையை அமைத்த கொள்ள உதவி வழங்க வேண்டுமேயன்றி ஆணுக்கோ, பெண்ணுக்கோ சீதனம் என்பதை வாங்கவோ கொடுக்கவோ வேண்டாம். அதனை உதவியாக சித்தரிக்கவும் வேண்டாம். வண்ணத்துப் பூச்சிகளாய் கடினப்பட்டு வெளிவர இவையே அவர்களுக்கு உதவும், உங்கள் சீதனம் அல்ல.

செய்திவலம்

## வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்னதமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் உற்சவம்

உகந்தைமலை முருகனாலயத்தின் கும்பாபிசேகம் எதிர்வரும் ஜூன் மாதம் 04ம் திகதி நடை பெறவுள்ளது. முன்னதாக 02ஆம் 03ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு நடைபெறும். கும்பாபிசேகத்தையடுத்து தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூஜைகள் நடைபெற்று யூலை மாதம் 25ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும். ஆலய வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் யூலை மாதம் 27ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 10ம்திகதி சமுத்திரதீர்த் தோற்சவத்துடன் நிறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்ட வரலாறுகள்


# இனவழிப்பு சாதனையாளனை கொண்டாடும் அமெரிக்கா

-நக்கீரர்-



அரவாக்ஸ் இன மக்களின் சந்தோசமான வாழ்க்கை

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 12ம் தேதி, கொலம்பஸ் என்ற கொலை வெறியனை நினைவு கூர்ந்து விழா எடுக்கிறார்கள். “கொலம்பஸ் தினம்”



அரவாக்ஸ் மக்களின் வீடு

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒரு முக்கியமான விடுமுறை தினம். கொலம்பஸ் அமெரிக்காவை “கண்டு பிடித்த” கதையை பாலர் பாடசாலையில் இருந்தே சொல்லிக் கொடுக்கின்றார்கள். யார் இந்த கொலம்பஸ்? கரீபியன் தீவுகளில் வாழ்ந்த இரண்டு லட்சம் மக்களை இரு வருடங்களில் இனவழிப்பு செய்த சாதனையாளன். ஒன்பது வயது சிறுமிகளைக் கூட பாலியல் அடிமைக ளாக்கியகயவன் அமெரிக் காவில் முதன் முதலாக அடிமை வாணிபத்தை அறிமுகம் செய்த அயோக்கியன் இன்று உயிரோடிருந்தால் மனித குலத்திற்கு எதிரான குற்றம் இழைத்த தாக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பான்.



கொலம்பஸ்சினை வரவேற்றல்

அதற்கொல்லாம் ஆதாரம் உண்டா? கொலம்பஸ் தானே எழுதி வைத்த தினக்குறிப்புகள் இருக்கின்றன. கொலம்பஸின் ஆட்களில் ஒருவரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தலோமே லாஸ் காஸாஸ் கொடுமைகளால் மனம் வருந்தி எழுதிய குறிப்புக்கள் இருக்கின்றன. அவற்றில் அமெரிக்க மக்களை இனவழிப்பு செய்த கொடூரங்கள் விலாவாரியாக எழுதப்பட்டுள்ளது. இன்று யாரும் இவற்றை நினைவு கூற விரும்புவதில்லை. வரலாற்றுப் பாடநூல்களும் சம்பிரதாய த்திற்காக என்றாலும் குறிப்பிடுவதில்லை. இனவழிப்பு செய்த கொலம்பஸை தேசிய நாயகனாக விழா எடுத்துக் கௌரவிக்கும் வெட்கக்கேடு அமெரிக்காவில் நடக்கின்றது. இதை அறியாத பல தமிழர்கள் அமெரிக்கர்கள் நாகரிகமானவர்கள் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.



அடிமையாக துன்புறுத்தல்

அமெரிக்காவில் கொலம்பஸ் தினம் கொண்டாடப்பட வேண்டுமென அரசுக்கு பிரேரணை செய்து Knights of Columbus என்ற அமைப்பு இது ஒரு வெளிநாட்டவருக்கெதிரான நிறவெறிக் கொள்கை கொண்ட கத்தோலிக்க அமைப்பு அவர்கள் கொலம்பஸை தமது பிள்ளைகளுக்கு கத்தோலிக்க ஆதர்ச நாயகனாக காட்டினார்கள்.



அரவாக்ஸ் மக்களின் பிணக்குவியல்

1934 ஆண்டு. ஜனாதிபதி பிராங்கலின் ரூஸ்வெல்ட் கொலம்பஸ் தினம் என்ற விடுமுறை நாளை உத்தியோக பூர்வமாக அறிவித்தார். முதன் முதலாக அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்தது கொலம்பஸ் அல்ல என்பது இன்று அனைவருக்கும் தெரிந்த உண்மை. செவ்விந்திய பூர்வீக குடிகள் பதினான் காயிரம் வருடங்களுக்கு முன்பே கண்டுபிடித்து விட்டார்கள். கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் என்றும் கூறமுடியாது. leif Ericson என்ற கடலோடி தலைமையில் ஸ்கன்டிநேவியாவில் இருந்து வந்த வைகிங் மக்கள் கனடாவில் நியூபவுன்லாந்து மாகாணத் தில் குடியேறி வாழ்ந்தனர்.

12 அக்டோபர் 1942ம் ஆண்டு கொலம்பஸ் பஹாமாஸ் தீவுகளில் காலடி எடுத்து வைத்த காலத்தில் அங்கே அரவாக்ஸ் இன மக்கள் வாழ்ந்து வந்தார்கள். சமாதான விரும்பிகளான அந்த மக்களைப் பற்றி கொலம்பஸ் தினக்குறிப்பில் இவ்வாறு எழுதி வைத்தார்.

"அவர்கள் தம்மிடம் இருப்பதை எல்லோருடனும் பகிர்ந்து கொள் கிறார்கள். கேட்பதற்கொல்லாம் இல்லை என்று மறுப்புக் கூறுவதில்லை ..........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரவாக்ஸ் மக்களிடம் எந்த ஆயுதமும் இல்லை. அவர்களது சமூகத்தில் குற்றவாளிகள் இல்லை. கைதிகள் இல்லை. சிறைகள் இல்லை. எமது கப்பலான சாந்தா மரியா கரைதட்டி உடைந்த பொழுது கப்பலில் வந்தோரையும் பொருட்களையும் மீட்க அரவாக்ஸ் மக்கள் உதவி செய்தனர். கப்பலில் இருந்த ஒரு பொருளை யேனும் அவர்கள் ஒளித்து வைக்க வில்லை.

இவ்வாறு மனமுவந்து உதவி செய்த நேர்மையான அரவாக்ஸ் மக்களுக்கு கொலம்பஸ் செய்த கைம்மாறு என்ன? அந்த மக்களை அடிமைகளாக்கி தங்கச் சுரங்கங்களில் கட்டாயமாக வேலை வாங்கினான். இருப்பதை பங்கிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்த் மக்கள் இன்னலுற்று மனமொடிந்து தற்கொலை செய்து கொண்டார்கள். ஒரு கட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் கூட்டாக தற்கொலை செய்தனர். அரவாக்ஸ் பெண்களை கொலம்பஸ் இவ்வாறு எழுதியுள்ளார். "இளம் பெண்க ளுக்கான கேள்வி அதிகரித்த காரணத்தால் அவர்கள் 9,10 வயது சிறுமிகளை தேடிச் சென்றார்கள் ............."

அரவாக்ஸ் அடிமைகளை இறக்கும் வரை இரத்தத்தை பிழிந்து வேலை வாங்கினார்கள். ஒரு செவ்விந்திய அடிமை தினசரி குறிப்பிட்ட கோட்டா தங்கம் எடுத்துக் கொடுக்காவிட்டால் தண்டனையாக இரு கைகளையும் வெட்டினார்கள். அடிமை முறைக்கு எதிர்ப்புக் காட்டிய அரவாக்ஸ் தொழிலாளியின் மூக்கையும், காது களையும் அறுத்தனர். அடிமை விலங்கை உடைத்துக் கொண்டு தப்பியோடி பிடிபட்டால் உயிரோடு கொளுத்தினர். கொலம்பஸ் தனது இரண்டாவது பயணத்தில் வேட்டை நாய்களைக் கொண்டு வந்தான். தப்பி யோடும் அடிமைகள் மீது நாய்களை அவிழ்த்து விடுவார்கள். தப்பியோடியவர்களை வேட்டையாடும் நாய்கள். அவர்களை கடித்துக் குதறி கை வேறு, கால் வேறாக பிய்த்து விடும். கொலம்பஸின் ஆட்கள் தமது வேட்டை நாய்களுக்கு மாமிச உணவு தீர்ந்து விட்டால் அரவாக்ஸ் இனக் குழந்தை களை வெட்டி உணவளித் தார்கள். ஸ்பெயின் இருந்து நீண்ட கடற்பயணம் செய்து வந்தவர்களை விருந்தாளிகளாக ஏற்று உபசரித்த அரவாக்ஸ் மக்களுக்கு கொலம்பஸ் செய்த நன்றிக்கடன் அப் படியானது. தான் செய்த கொடூரங் களுக்காக கொலம் பஸ் வருந்தியதாக தெரியவில்லை. கிறிஸ்தவர்களை அடிமைகளாக வைத்திருக்க கத்தோலிக்க சட்டம் அனுமதிக்கவில்லை. அதற்காக கொலம்பஸ் ஒரு தந்திரம் செய்தான். செவ்விந்திய குடிமக்களுக்கு ஞானஸ்தானம் கொடுப்ப தற்கு தடை விதித்தான்.



சித்திரவதைகள்

கிறிஸ்தவர்கள் அல்லாதோரை கொன்றாலும் பாவம் இல்லை அல்லவா?

ஜெர்மனியில் ஹிட்லரை தேசிய நாயகனாக கொண்டாடினால் உலகம் எந்தளவு அதிர்ச்சி அடையும்? மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் மிக்கவர்களாக உலகிற்கு காட்டிக் கொள்ளும் அமெரிக்கர்கள் கொலை வெறியன் கொலம்பஸை தேசிய நாயகனாக கொண்டாடுவதைத் கண்டு யாரும் அதிர்ச்சி அடையவிலலை. ஏன்? உலகவரலாறு முழுவதும் இனப்படு கொலையாளர்களை மாவீரர்களாகவே போற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். ஜீலியஸ் சீசர், அலெக்சாண்டர், நெப்போலியன் ...... உதாரணத்திற்கு சில. இவ்வாறு வரலாறு முழுவதும் இனவழிப்பு சாதனையாளர்கள் இருந்துள்ளனர். "மேலைத்தேய நலன்களுக்காக கொலை செய்பவர்கள் பரிசுத்தவான்கள். அதனால் அவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கலாம்" எனப் போதிப்பது கிறிஸ்தவம்.



## இந்துக்கள் நாங்கள் இந்துக்களுக்காக!

**அன்பான இந்துத்தமிழ் வாசகர்களே!**

உங்கள் ஊரின் இந்து தேசியம் பற்றி எங்களுக்கு எழுதுங்கள். இந்துக்கள் எதிர்நோக்கும் எந்த வகையான பிரச்சனைகளாயினும் சரி, பெருமைகளாயினும் சரி எங்களுக்கு எழுதுங்கள். "இந்துக்கள் நாங்கள் இந்துக்களுக்காக" என்னும் பகுதியில் அதனை பிரசுரித்து அனைத்து இந்துக்களையும் வழிப்புணர்வு பெறச் செய்வோம்.

ஆக்கங்களை Voiceofhindus5@g.mail,com எனும் ஈமெயிலின் மூலமாகவும் தபாலில் சிவ.சுதர்சனன், செட்டியர் தெரு, குருக்கள் மடம் மட்டக்களப்பு என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமொரு மேய்ப்பன் வருகைக்காய்

**கவிஞர் வரணியூரான்**

அண்மையில் மரணமடைந்த யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த சகோதரி கொன்சலிற்றா அவர்களின் நினைவாக வரணியூரான் அவர்களால் வடிக்கப்பட்ட கவிதை சகோதரியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து இந்தக் கவிதை பிரசுரமாகின்றது.

ஓம் சாந்தி சாந்தி, சாந்தி

மீண்டுமொரு மேய்ப்பன் வருகைக்காய்
மேய்ப்பனை வெட்டுவேன் ஆடுகள்
சிதறிப்போம் - என்ற சத்தியவசனம்
மீண்டுமொருமுறை சரிபார்க்கப்படுகிறது
அநேருக்காக சிந்தப்படுகின்ற இரத்தத்தின்
புதிய உடன்படிக்கை
புதிதாயொரு முறை இங்கு
புதுப்பிக்கப்படுகின்றது
சீமோனுடைய குமாரனுக்குப் பின்னும்
சீடன் நீசனாகும் கதை
நில்லாமல் நீண்டு செல்கிறது
அவரை வைத்த இடத்தைச் சொல்லும்
நான்போய் எடுத்துக்கொள்வேன்
என்ற ஏக்கங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன
மனந்திரும்புதலுக்கான மன்றாட்டங்கள் -
இப்போதும் எங்களால்
மனதுருக்கத்துடன் செபிக்கப்படுகின்றன.
சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க
விரும்புபவர்கள் இடறலடைவது
இப்போதும் இடையறாமல் நீள்கிறது
சிலுவைப்பாதையில் கன்னிமரியாளின்
கண்ணீர்ப்பயணம்
மீண்டும் காட்சிப்படுத்தப்படுகிறது
விக்கிரங்களை அருவருப்பவர்கள்
கோயிலைக் கொள்ளையிடும் மரபு
கோரமாய் இன்னும் தொடர்கிறது
சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு
ஒரு வழியாய்
தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்
போனவர்கள் - இப்போது
வாடகைக்கு இருந்ததால் வந்திருக்கிறோம்
என்கிறார்கள்
பஸ்கா பண்டிகையில் நீ சவுக் கெடுத்ததே
சரியென்றவர்களை
இப்போது உன்னை வன்முறைவாதி என்று
விண்ணாணம் பேசுகிறார்கள்
நேற்றுவரை உன்கொள்கைக்கு உயிர்
கொடுப்பதாய் சொன்னவர்கள்
இன்று முறைவைத்து உன்னை
மறுதலிக்கிறார்கள்
பார்வைக்கு நீண்ட பிரசங்கம் செய்தபடி
– உன்நாமத்தின் பேரால்
அற்புதம் செய்யப் போவதாய்
போலி அப்போஸ்தர்கள் பெரிந்துத்
தள்ளுகிறார்கள்
ஒளியின் தூதனுடைய வேஷத்தை
சாத்தான் தரித்துக் கொள்ளும்
தந்திரம் தடையின்றி அரங்கேறுகிறது
சபிக்கப்பட்ட பூமியில் நின்றபடி
வாக்களிக்கப்பட வாழ்வுக் கான
காத்திருப்புக்கள் கண்ணீரால் நனைகிறது.
ஆண்டவரே ஆண்டவரே என்னை ஏன்
கைவிட்டீர்? உதிரம் பிழியும்
வார்த்தைகள்உரத்து உச்சரிக்கப்படுகின்றன.
எனக்காக அழாமல் உங்களுக்காகவும்
உங்கள் பிள்ளைகளுக்காகவும்
அழுங்கள் என்பது
எள்ளளவும் பிசகாமல் எங்களுக்குப்
பொருந்துகிறது
உன் உயிர்த்தெழுதல் பற்றிய உன்னதமான
நம்பிக்கைகள் மட்டும்
ஊமையாய் இன்னும்
உயிரோடிருக்கின்றது.
மரித்துப்போன மனிதர்கள் நாங்கள்
உன்னதங்கள் எப்போதாவது உயர்வு
பெறும் என்ற நம்பிக்கையோடு
மீண்டுமொரு மேய்ப்பன் வருகைக்காய்
காத்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களின் இந்துதர்ம எதிர்ப்புக்கள் சினிமா என்னும் மாய ஊடகம்


-ஜடாயு-

தமிழ் சினிமா திராவிட இயக்கங்களின் கைப்பிடிக்குள் அகப்படுகின்ற வரையில் பக்தித் திரைப்படங்களும் இந்துமதபுராண இதிகாசங்களின் மேன்மைகளை சொல்லும் படங்களே பெரும்பாலும் வந்துகொண்டே இருக்கும். திராவிட இயக்கத்தினர் தமிழ் சினிமாவை ஒரு சக்தி வாய்ந்த பிரசார உத்தியாக பயன்படுத்தத் தொடங்கியதில் இருந்து இந்த நிலை மெதுமெதுவாக மாறத்தொடங்கியது



ஜேம்ஸ் விஜய்.

தமிழ் சினிமாவில்சமூகஅவலங்களை சாடுகிறோம் என்ற போர்வையில் பெரும்பாலும் இந்துமதக் கடவுள் களையும் இந்துமத பாரம்பரி யங்களையும் சடங்கு களையும் நம்பிக்கைகளையும் விமர்சித்து கேலி செய்யும் திரைப்படங்கள் மெதுவாக தமிழ் திரைப்பட உலகில் வரத் தொடங்கின. பராசக்தி போன்று கருணா நிதியும் அண்ணாத்துரை கதை வசனம் எழுதிய படங்களிலும், என்.எஸ்.கிருஸ்ணன் நகைச்சுவை என்றபெயரில் பகுத்தறிவை பரப்புகிறேன் என்று வைத்த காட்சிகளிலும் தொடங்கின. பின்னர் இதே செயற்பாடுகள் எம்.ஆர்.ராதா போன்றோரால் தொடரப் பட்டது. இன்றும் விவேக்,சீமான் என்று பெரியார் பட்டாளமே இந்துமதத்தை இழிவாக ்த்தரிக்கும் வழக்கம் தமிழ்ப்பட உலகில் தொடர்கதையாகி வருகிறது. ஆரம்பத்தில் சமூக சீர்திருத்த கருத்துக்களை சொல்வது போல் தோன்றும். ஆழமாக அதை கவனிக்கும் போது மட்டுமே அவர்களின் மோசமான நடத்தைகள் புரியவரும். தமிழ்ப்பட உலகில் பெரும்பாலும் இந்துமதமும் அதன் பாரம்பரியங்களும் மட்டுமே கேலிக்குள்ளாக்கப் படுகின்றன. இதர மதங்களைப்பற்றி இவர்கள் மூச்சேவிடுவதில்லை. இந் நிலையே இன்றுவரை காணப்படுகின்றது என்பதும், அதனைப் பற்றி இந்துக்கள் சிறிதும் கவலை கொள்ளாமல இருப்பதும் வருத்தத்திற்குரிய விடயம்.




விவேக்

இந்துமதம் குறித்து கருணாநிதி, அண்ணாத்துரை என்.எஸ் கிருஸ்ணன் போன்றோரால் வெளிப்படையாகச் செய்து வந்தநாஸ்திகப் பிரசாரங்களும் அபவாதங்களும் பீம்சிங் போன்ற இயக்குனர்களால் திரைமறைவில் சற்றே சாதுரியமான முறையில் நுட்பத்துடன் செய்யப்பட்டன. பாவமன்னிப்பு முதல் கொண்டு அண்மையில் வெளிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜில்லா வரை தமிழ்ப்படங்களை மிக உன்னிப்பாக கவனித்தால் அதில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களும் முஸ்லீம்களும் அன்பும் பண்பும் நிறைந்த நாகரிகமானவர்களாகவும் இந்து மதத்தினர்கள் மிக மோசமான வில்லன்களாகவும் சித்திரிக்கப்பட்டிக்கும் உத்தியினைக் காணலாம்.




செபஸ்டியன் சைமன்.

இதனைப் போன்ற ஒரு இந்துஎதிர்பபுச் சூழலிலும் இந்துமத நம்பிக்கைகளை தூண்டும் விதமான படங்களும் வராமலில்லை. இதனை சாண்டோ எம்.எம்.ஏ சின்னப்பாத் தேவர் ஏ.பி.நாகராஜன் ஆகியோர் சாத்தியமாக்கினர். எனினும் ராம நாராயணன் போன்ற இயக்குனர்களால் இந்து மரபுகள் அதிகளவில் மலினப்படுத்தப்படுவதும் தொடர்கிறது. ஒரு புறம் இந்துமத நம்பிக்கைகளைக் கேலிசெய்யும் திரைப்படங்களும் மறுபுறம் இந்துமதத்தை மலினப்படுத்தி வியாபாரமாக்கி விற்கமுயற்சிக்கும் திரைப்படங்களுமாக தமிழ்த் திரையுலகில் இந்து மதம் என்பது ஒரு கேலிப் பொருளாகவோ அல்லது வியாபாரப் பொருளாகவோ ஆகிவிட்டது. இந்துமதத்தின் தத்துவங்களையும் ஆன்மீக உணர்வுகளையும் சிரத்தையுடனும் அழகிய கலையுணர்வுடனும் மக்களிடையே எடுத்துச் செல்லும் சினிமாக்காரர்களே இல்லாமல் போய் விட்டார்கள்.



சான்டோ சின்னப்பாதேவர்

தமிழ் சினிமாக்களில் கடவுள் நம்பிக்கையை அழுத்தமாகச் சொல்லும் படங்கள் வருவது வெகுவாக அருகி மசாலா பக்திப் படங்கள் மட்டுமே எப்பொழுதாவது வருகின்றன. ஒரு ரஜனிகாந்த் தன் பாபா படம் மூலமாகவும் ராமநாராயணன் தன் மசாலா பக்திப் படங்கள் மூலமாகவும் இந்துக்களின் பக்தியுணர்வைத் தட்டியெழுப்பியிருப்பதாகச் சொல்ல முடியாது. ரஜனிகாந்த் போனற ஒரு கதாநாயகனோ அல்லது மிருகங்களோ இல்லாமல் இருந்து அதனை மக்கள் பார்த்து அமோகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தால் அவற்றை இந்துமத மேன்மையைப் போற்றும் சினிமாக்களாத கருதலாம். ரஜனிக்காக மற்றும் குரங்கு பாம்புகள்செய்யும் விதத்தைக்காகப் பார்க்கப்படும் படங்களை வெறும் சினிமாவாகவே பார்க்க முடியும்.



ரஜினிகாந்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் பாரமபரியம் மிக்கது நம் சாஸ்ததிரங்களிலும் சமபிரதாயங்களிலும் அர்த்தம் உள்ளது. அதை மதிக்க வேண்டும் என்று சொல்ல முயல்வது கூட தமிழ் சினிமாவில் கெட்ட வார்த்தையாகிப் போயுள்ளது. தனக்கு கடவுள் (இந்துக் கடவுள்களிடம் மட்டும்) நம்பிக்கையில்லை என்று மேடைக்கு மேடை ஏறிச்சொல்வதும் இந்துக் கடவுள்களை இந்து நம்பிக்கைகளை மட்டும் இகழ்வதும் கமல் சத்யராஜ், சீமான், விஜய், விவேக் போன்ற பலருக்கும் கௌரவமான அடையாளமாகிவிட்டது. இவர்களில் சிலரை பெரும் தத்துவ மேதைகளாகவும் தமிழின் காவலர்களாகவும் தமிழர்கள் புகழ்ந்து திரிகிறார்கள் என்பது வேறு.

பொதுவாக தமிழ்த்திரைப்படங்களில் இந்துமதம் தவிர்ந்த பிற மதங்களின் நமபிக்கைகளும் வழிபாடடிடங்களும் அதிக மரியாதையுடனும் எவ்வித கேலியும் கிண்டலும் நக்கலும் இன்றியே காண்பிக்க ப்படும்.அதே போன்று கிறித்துவப் பாதிரியார் என்பவர் அன்பும் கருணையும் உடையவராகவே காண்பிக்கப்படுவார். அதுபோல் முஸ்லீம்கள் எப்பொழுதும் சகோதர மனப்பான்மையுடனும் கருணையு டனுமே காண்பிக்கப்படுவார்கள். ஆனால் இந்துமத பக்தர்கள் அயோக்கியர் களாகவும் வழிபாட்டிடங்கள் கேலி கூத்துக்கள் நடக்கும் இடங்களாகவும் காட்டப்படும். கடந்த 65 வருடகால திராவிட அரசியலின் தாக்கம் இன்றும் தமிழ் சினிமாவை ஆட்டிப் படைக்கின்றது. ஒரு சில நடிகர்களைத் தவிர ஏனையவர்கள் போலித்தனமும் இரட்டை வேடமும் போட்டு நிஜ வாழ்க்கையிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்துக்களை எப்போதும் குறிவைக்கும் கூட்டங்களின் பணவலிமையில் தம்மை தொலைத்து விடுகிறார்கள்.இதற்கு மறைந்த நடிகர் எம்.ஜி.ராமசந்திரன்(MGR) அவர்களே சாட்சி. இவர் வெளியுலகில் தன்னை நாத்திக கொள்கையாளராக காட்டினாலும், உண்மையில் றோஸ் பவுடரின் நடுவே விபூதி பூசிக்கொள்வார்.



எம்.ஜி.இராமசந்திரன்

இதற்கு காரணம் நீண்டகாலம் திட்டமிட்டு தமிழர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்பட்ட திராவிட மாயையும், இந்துமத எதிர்ப்பு மேயாகும். தன்னை நிலை நிறுத்தி கெள்ள வேண்டுமாயின் சூழ்நிலைக்கு தக்கபடி மாறவேண்டிய தேவையும் அவசியமும் உணரப்படுகின்றது. இதனால் நாஸ்திக கொள்கையும் இந்துமத எதிர்ப்பும் தங்களை தக்கவைத்துக் கொள்ளவேயன்றி வேறொன்றுமில்லை.

இதனையே யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் தமிழர்கள் பல்வேறு தேவைகளுக்காக கிறிஸ்தவ மதத்திற்கு மாறினாலும் அவர்களால் சில பழக்க வழக்கங்களை கைவிட முடியாது இரட்டை வாழ்க்கை வாழ்ந்ததாக குறிப்பிடுகின்றார். இன்றும் அதனை நாம் கண்கூடாக பார்க்கின்றோம். எனவே சிறந்த தொரு இந்துத்துவ சூழ்நிலையும், இந்துத்துவ வாழ்க்கை முறையும் பிழைகளை சுட்டிக்காட்டவும் தட்டிக்கேட்க தைரியமும் இருக்கு மாயின் போலிகள் எல்லாம் காலியாகும். விவேகானந்தர், பாரதியார், நாவலர் போன்ற மகான்களின் இந்து ஒற்றுமைக்கான கனவும் பலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்

# இந்துக்குடும்ப வாழ்க்கை நெறிமுறைகள்

**தருவது : யோகராஜா துஷ்யந்தன்**

கடந்த மாதம்

ஓவியரின் சிறந்த ஓவியத்தை தனது குடும்பத்தில் கண்டு கொண்டான். அதே போன்றுமார்கிரட் தாச்சர் இந்துக்கள் இங்கிலாந்து மக்களுக்கு குடும்பப் பண்புகளை போதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் இன்று இந்துக் குடும்பங்களில் பெரியவர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பதும், பெரியதோர் எண்ணிக்கையில் இருந்த இந்துக் குடும்ப அங்கத்தவர்கள் நாமிருவர் நமக்கிருவர் என்ற நிலையில் மாறி வருவதையும் அதற்கு பொருளாதாரமே காரணமாகக் கூறப்படுவதும் உண்மையா? ஆமெரிக்காவில் எவ்வளவு செழிப்பு இருந்தும் மனிதனுக்கு மனத்திருப்தியும் அமைதியும் கிடைப்பதில்லையே ஏன்?

நான் அல்ல நாம்

குடும்பத்திலிருந்து தான் சமுதாயம் அமைகிறது. சமுதாயத்தில் இசைவு இணக்கம் வளர்வது உயரிய பண்புப்பதிவுகள் வாய்ந்த மேலான தனி நபர்களை உருவாக்குவது, அண்டை அயலில் உள்ள மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரம், செடி, கொடி, கல், மண், முதலிய எல்லா அசையும் அசையா பொருட்களுடன் பரஸ்பர ஒத்துழைப்புடன் கூடிய ஆன்ம நேய நல்லுறவு கொள்ளுதல் நான் என்ற எண்ணம் குறைந்து நாம் என்ற சமுதாய உணர்வு வளர்தல் இந்த எல்லா விடயங்களுக்கும் இந்துக் குடும்ப அமைப்பே விளை நிலமாக இருந்து வந்துள்ளது.

இன்று உலகம்சுயநலத்தில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக சந்தேகமும் வெறுப்பும் வன்முறையும் தலை விரித்தாடுகின்றன. மோதலுக்கே வாழ்நாள் சரியாகி விடுகிறது. சுரண்டலே கலாச்சாரம் என்று ஆகிவிட்டது. இதெல்லாம் சரிதானா? ஏன்று கேட்டால் சரியில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் எது சரி? என்ற கேள்விக்கும் பதில்தான் கிடைப்பதில்லை.

இந்தச்சந்தர்பபத்தில் இன்று உள்ளதற்கு மாற்று ஏற்பாடு இந்து குடும்பம் என்று எல்லோருக்கும் தோன்றுகிறது. அதுவே சத்தியமும் சாத்தியமும் மிக்க உண்மையாகின்றது. இந்துக் குடும்பம் பரிவு, ஆன்மநேயம் போன்ற உனர்வுகளை கொண்டு பின்னியது. சமுதாயம் நல்லபடியாக விளங்கவேண்டும் என்று திருவுள்ளம் கொண்ட ரிஷிகள் இலடசிய சமுதாயம் அமைய தேவையான ஏற்பாடு, தத்துவம், பண்புப்பதிவுகள் ஆகியவை குடும்பத்தின் வாயிலாகவே வழங்க வகை செய்தார்கள். குடும்பம் நல்ல பண்புகளை விளைவித்து வந்ததில் இலட்சியசமுதாயம் தானாக அமைந்தது. அதற்கென தனி முயற்சி செய்ய அவசியமில்லாது போனது.

குடும்பம் என்பது குழந்தைகளுக்கு அறிவூட்டிதிசைகாட்டி நம்பிக்கையூட்டி மனோதிடம் வளர்க்கும் ஒரு குருகுலம் எனக்கண்டார்கள். இளைஞர்களுக்கு தானும் இன்பமடைந்து . வீட்டாருக்கும் தேசத்திற்க்கும் உலகத்திற்க்கும் நலம் விழைய பாடுபட தூண்டும் ஓர் தவச்சாலை எனக் கண்டார்கள். மூத்தோரிடம் இளையோர் மதிப்பும் மரியாதையுமாக பழகும் சரணாலயம் எனவும் உணர்ந்து கொண்டார்கள்.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களது மெய்யான சிந்தனைகளே! நவீன விஞ்ஞானத்தின் முன்னோடிகள்

**N.P ஸ்ரீந்திரன்**
**வலிகாமம் கல்வி வலயம்**
**மருதனார்மடம்**

இந்து சமயம் தொன்மை யானது. தோற்றம் முடிவற்றது. தொடர்ந்து வளர்ந்து வருவது காலத்துக்கு காலம் ரிஷிகளும், மெய்ஞானிகளும், சித்தர்களும் நாயன்மார்களும் இதை வளர்த்து வந்துள்ளனர். வருகின்றனர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட வேதங்களும் ஆகமங்களும் இதிகாச, புராணங்களும், திருமுறைகளும், சித்தார்ந்த சாஸ்திர நூல்களும் இந்துக்களது மெய்ஞான சிந்தனைகளே. நவீன விஞ்ஞானத்தின் முன்னோடி என்ற உண்மையினை விளக்கி நிற்கின்றன.

எமது இந்துசமயத் திரு நூல்களின் சிந்தனைகள் எவ்வாறு நவீன விஞ்ஞானத்திற்கு முன்னோடியாக அமைய முடியும். அமையலாமா,? என்ற வினா நம்மில் பலருக்கு ஏற்படலாம். இந்திய, ஐரோப்பிய வரலாறுகள் தெரிந்தவர் இதற்கான விடையினை இலகுவில் புரிந்து கொள்வார். குறிப்பாக இந்தியாவும் இலங்கையும் மேலைத் தேசத்தவர்களால் பல நூற்றாண்டுகள் ஆட்சிக்குட்பட்டிருந்துள்ளன. போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் களால் இந்த நாடு அடிமைப்படுத்தப்பட்டு ஆட்சி செய்யப்பட்டிருந்தன. வர்த்தக நோக்கத் திற்காக இந்நாட்டவர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தாலும் இந்நாடுகளின் அறிவுச் செல்வங்களை அள்ளிச் செல்வதிலும் சூறையாடு வதிலும் கவனஞ் செலுத்தி வந்தனர். இவ்வாறு அள்ளிச் சென்ற அறிவுச் செல்வங்களில் வேதம், ஆகமம், இதிகாச புராணங்கள் முக்கியமானவை. இவற்றினைத் தத்தமது நாடுகளிற்கு கொண்டு சென்ற அந்நிய தேசத்தவர்கள் அதனைத் தத்தமது மொழிகளில் மொழி பெயர்த்து, அதிலுள்ள அறிவியற் சிந்தனைகளை ஆராய்ந்து அறிந்து அதன் அடிப்படையில் பல விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு இருந்தனர். அமெரிக்கா, பிரான்ஸ் தேசங்களில் அமைந்துள் கீழைத்தேச சுவடிகள், காப்பகம், நுதானசாலைகள் என்பன இதற்கு தக்க சான்று பகிர்கின்றன. மேலும் பிரான்சில் காணப்படும் "பாண்டிச்சேரி ஆய்வு நிறுவனமும்" இதனை உறுதிப்படுத்தும் இந்த ஆய்வு நிறுவனம் வேதங்கள், ஆகமங்கள், இதிகாச புராணங்கள் என்பவற்றில் கூறப்படுகின்ற விடயங்களை ஆய்வு செய்து கொண்டிருப்பது கற்றோர் அறிந்ததே. இதன் அடிப்படையில் தான் ஆரம்பத்தில் கீழைத்தேச அறிவியல் செல்வங்கள் மேலைத்தேச நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவை விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்ற உண்மையின் அடிப்படையிலேயே இந்த ஆய்வுக் கட்டுரையை நாம் நோக்க வேண்டும்.

### அறிவும் விஞ்ஞானமும்

இந்து சமயத்தின் மிகத் தொன்மையான நூல் வேதங்கள். இது இறைவழி நின்ற ரிசிகளால் தோற்றுவிக் கப்பட்டது என்பது இந்து சமய மரபு. இந்த வேதம் "வித்" என்ற வினையடியில் இருந்து பிறந்தது என்பார். இதன் கருத்து "அறிவு" என்பதாகும். அவ்வாறே "ஆகமம"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல்லுக்கு கருத்து தொன்று தொட்டு வரும் அறிவு என்பதாகும். இதிகாச புராணங்கள் இந்துக்களது அறிவுக் களஞ்சியமாக உள்ளன என்பது இதனை ஆய்வு செய்த வெளிநாட்டு அறிஞர்களின் கருத்தாகும். "விஞ்ஞானம்" என்ற பதமும் அறிவு என்பதையே சுட்டும். மெய்ஞானிகளும், விஞ்ஞானிகளும் அறிவு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தனர்.

**மெய்ஞானியும் விஞ்ஞானியும்**

இந்து மெய்ஞானிகளினது சிந்தனைகளும் விஞ்ஞானிகளது சிந்தனைகளும் இப்பிரபஞ்சத்தின் உண்மை பற்றிய ஆய்வாகவே காணப்படுகின்றது. இதனை இன்னொரு விதமாகக் கூறின் இருபகுதியினரின் சிந்தனைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக காணப்படுகின்றன. எனினும் இப்பிரபஞ்ச உண்மைகளைக் கண்டு பிடிக்கும் முறைமைக்கிடையில் தான் இருபகுதியினருக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்து மெய்ஞானிகள் மனத்தினைக் கருவியாகக் கொண்டு இறைவழி, ஆன்மீக வழி நின்று செபம், தவம் தியானத்தின் மூலம் ஞானத்தைப் பெற்று பிரபஞ்ச உண்மைகளை அகக்கண்ணினால் கண்டுணர்ந்து வெளிப்படுத்தி வந்தனர். ஆனால் விஞ்ஞானிகள் புறக்கருவிகளைத் துணைகொண்டு ஆய்வுகூடப் பரி சோதனைகள் மூலம் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைச் செய்துள்ளனர். மேலும் இந்து மெய்ஞானிகள் இப்பிரபஞ்ச இரகசியத்தை மட்டுமன்றி கண்ணுக்குப் புலப்படாத கடவுள் ஆன்மா. அவற்றின் இருப்பு செயற்பாடு இயல்புகள் பற்றியும் அறிந்து கூறியுள்ளனர். இதுவே இந்து மெய்ஞானிகளுக்கும் மேலைத்தேச விஞ்ஞானிகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும்.

இந்து மெய்ஞானிகள் தமது மனதினைப் பிரபஞ்ச வெளியுடன் தொடர்புபடுத்தி பல உண்மைகளைக் கண்டுணர்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். இதனை நவீன விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். "புதிய கருத்துக்கள் ஆகாயத்தில் இருந்து தமக்கு கிடைத்ததாக தோமஸ் அல்வாஎடிசன் தெரிவித்துள்ளார். நம் நாட்டுச் சித்தாந்த மேதை அள வெட்டியூர் கைலாசபதி மெய்யியல் என்ற தனது நூலிலும் இதனைத் தெரிவித்துள்ளார்." ஆகவே கண்டு பிடிப்புக்கான விடயங்கள் யாவும் இப்பிரபஞ்சம் எங்கும் மறைந்து பொதிந்து இருக்கின்றன. அதனை மெய்ஞானிகளும், விஞ்ஞானி களும் கண்டு பிடித்துள்ளனர் என்பதே யதார்த்தம்.

அடுத்த மாதம் பார்போம்....

இந்துசமய செய்திகளை இலவசமாக உங்கள் கைத்தொலைபேசியில் பெற f என ரைப் செய்து இடைவெளி விட்டு hsssl ரைப்பண்ணி 40404 என்ற எண்ணிற்கு send பண்ணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் உடைப்பதன் தத்துவம்

கோயில்களில் பெரும்பாலும் இறைவனுக்கு தேங்காய் உடைப்பது வழக்கம். ஏன் தேங்காய் உடைக்கிறோம். இதில் என்ன தத்துவம் இருக்கிறது என்ற விபரம் நம்மில் பலருக்குத் தெரியாது. ஏனோ சாமிக்கு அர்ச்சனை செய்தோம் தரிசனம் செய்தோம் என்ற வாறே நாம் தொன்று தொட்டு செய்து வருகிறோம். அதைப்பற்றி சிறிய தத்துவத் தகவல்.

தேங்காய் உடைப்பதில் பெரிய உண்மை மறைந்து இருக்கிறது. தேங்காயின் மேல் கடுமையான ஓடும் அதனுள் மென்மையான பருப்புமாகிய காய்ப் பகுதியும் அதனுள் நீரும் உள்ளது. உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்து இருக்கிறது. இரண்டும் கோளவடிவம் உடையது. இது உலக மாயையை குறிப்பது ஆகும். உள்ளே உள்ள வெண்னிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கும். இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்தி இருக்கிறது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்தா பிராப்தியையும் பெறாமல் நிக்கின்றது. அதேபோல் வெள்ளைப் பகுதியையும் நீரையும் காணமுடியாமல் ஒடு மறைக்கின்றது. ஈஸ்வர சன்நிதியில் மாயையை அகற்றி தேஜோமய சுவரூபத்தை காட்டி அவர் அருளால் பரமானந்தா பேர முதத்தை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது.

இவ்வளவு உட்கருத்து இருப்பதால் தான் தேங்காயை இறை வழிபாட்டின் முக்கிய பொருளாக வைத்து நம் முன்னோர்கள் வழிபட்டு வந்துள்ளனர். என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

## ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

“இந்துக்களின் குரல்” சஞ்சிகையில் இந்துதமிழ்ச் சிந்தனையுடன் கூடிய ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இந்துதமிழ் வரலாறு, அறிவியல், கலை, கலாச்சாரம், சமூகம் என பல்வேறு தளங்களிலிருந்தும் இந்துத்தத்துவச் சிந்தனையோட்டத்துடன் கூடிய ஆக்கங்களை அனுப்புவோர் தங்களது சுயவிபரத்துடன் ஆக்கங்களை இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி சிவ.சுதர்சனன், செட்டியர் தெரு, குருக்கள் மடம் மட்டக்களப்பு ஈமெயில் முகவரி : Voce ofhindus5@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயத்திற்கோர் அறிமுகம் - 2

**சற்குருபோதி நாத வேலன் சுவாமிகள்**

பல நம்பிக்கைகள் ஒரே பெயரின் கீழ்

இந்து சமயம் புதியவர்களுக்கு புதிராக இருப்பதன் முக்கிய காரணம் அதன் பரந்த தன்மையே ஆகும். இந்து மதம் ஓர் ஒற்றைப் பாரம்பரியம் அல்ல. விஷயங்களில் ஒரே இந்துக் கருத்து என்ற ஒரு நிலை கிடையாது. ஆன்மீக சம்பந்தமான விஷயங்களை வரையறுக்க ஒற்றை அதிகாரப்பூர்வத் தலைவர் கிடையாது. சில வழக்குச்சார்பு பிரிவுகள் உள்ளன. அவற்றுள் நான்கு பெரியவை. வைணவம், சைவம், சாக்தம், ஸ்மார்த்தம் மேலும் கணக்கிட முடியாத சம்பிரதாயங்கள் குருபாரம்பரியமாக வெளிப்படுத்தப் படுகின்றன. ஒவ்வொன்றும் முழுச் சுதந்திரத்துடன் அதிகாரத்தில் தன்னிறைவு கொண்டு உள்ளன. உண்மை வழக்கத்தில் கூறின், இந்த பெரும் மதத்தை பத்தாயிரம் சமயங்கள் சமாதானத்துடன் இந்து மதம் / சனாதாக தர்மம் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்று கூடியதாக வரையறுத்தும் புரிந்தும் கொள்ளலாம். இந்த பரந்த பாங்கை நோக்கத் தவறுவது ஓட்டு மொத்த மதத்தையே தவறானக் கண்ணோட்டத்தில் பார்க்க எடுத்து வைக்கும் முதல் அடி, பொதுவாக பெரும்பாலான ஆன்மீக பாரம்பரியங்கள் எளிதாக, ஒருங்கிணைக்கப்பட்டு. ஐயமின்றி இருக்கின்றன.

தொன்மை மட்டுமன்றி சிந்தனா அமைப்புக்கள், அழகுமிக்க கலை மற்றும் கட்டடமைப்பு, மக்களின் நெகிழ்வு ஆகிய ஆழமான கூறுகள் எல்லாம் இருந்தும் இந்து மதம் ஒரு புதிராகவே உள்ளது. திரிக்கப்பட்ட கருத்துக்கள் வழிந்தோடுவதால், செழிப்பு மிக்க கட்டமைப்பு, நேர்த்தி, ஆன்மீக பரிசுகளை அள்ளித் தரும் இம்மதம் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளது. எதோ பாம்பாட்டி, மாட்டு வழிபாடு, ஆணிப் படுக்கை யோகிகளின் நையாண்டி சம்மேளனத்திற்கு சற்றே உயர்ந்த கீழான இடத்தில் வைத்தும் பார்க்கப்படுகின்றது.

நல்ல வேளையாக, சற்று சுலபமான, இயற்கையான வழி ஒன்று இந்து சமயத்தின் பரப்பை அறிய உள்ளது. தெளிவான வழிகாட்டும் எண்ணிலடங்கா உயிர்வாழும் குருமார்கள், ஆசிரியர்கள், பண்டிதர்கள் மத்தியில் ஓர் ஆசான் தேர்தெடுக்கப்பட்டு, அவரின் போதனைகளைப் பயின்று, அவரின் சம்பிராதாயத்தைத் தழுவி, அந்த நீதி நெறிகளையும் ஒழுக்கத்தையும் மாணவன் எற்றுக் கொள்வதே அது. இவ்வாறே நடைமுறையில் மத நம்பிக்கை பேணப் படுகின்றது. புனித ஆண்களும், பெண்களும், லட்ச்சக்கணக்கில் குருமார்களாவும், மத பாதுகாவ லர்களாவும், நம்பிக்கை மிக்கவர்களுக்கு தூண்டு கோலாகவும் இருக்கின்றனர்.

**நான்கு அடிப்படைக் கோட்பாடுகள்**

சுலபமான ஒரு ஒட்டுமொத்தப் பார்வையில் (மிக எளிமையாக இருப்பினும்) பெருவாரியர்ன இந்துக்கள் நான்கு சார நம்பிக்கைகளை பகிர்ந்துக் கொள்கின்றனர். கர்மம், மறுபிறவி, எங்கும் தங்கும் தெய்வீகம் மற்றும் தர்மம். இந்த நான்கு நம்பிக்கை கோட்பாட்டை பின்பற்றி வாழும் ஒருவரை நாம் இந்து என அழைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்மம்**

நேர்ப்பொருள் அடிப்படையில் கர்மம் "காரியம்' அல்லது "செயல்" என பொருள்படும். விளக்கமாகக் கூறின் அது காரண – காரிய பொதுக்கோட்பாடு, வினை- வினைப்பயன், எது அனைத்து தோற்றத்தையும் ஆளுகின்றதோ அது. மனதின் இயற்கை சட்டவிதியே கர்மம். எவ்வாறு புவியீர்ப்பு சக்தி பௌதீக சட்டவிதியாக உள்ளதோ அப்படி. கர்மம் விதி அல்ல. ஏனென்றால் மனிதன் சுய முயற்சியால் தனது அடைவு நிலையை உருவதாக்குகின்றான். நல்லதை விதைத்தால் நல்லது கிடைக்கும். தீயதை விதைத்தால் தீயது கிடைக்கும் என வேதங்கள் சொல்கின்றன. கர்மம் நமது இந்த பிறவி மற்றும் கடந்த கால பிறவிகளிலும் ஒட்டு மொத்த செயல்களும் அவற்றினால் உருவான செயல்களையும் குறிக்கும். இதனால் நமது எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகின்றது. நமது அனுபவமும் அதனை நாம் எதிர்நோக்கும் விதமும் கர்மம் அழிவு வேலையைச் செய்கின்றதா அல்லது உதவிக்கரம் நீட்டுகின்றதா என்பதை காட்டுகின்றது. கர்மத்தை வெற்றிக் கொள்ள அறிவார்ந்த செயல்களும் உணர்ச்சி வசப்படாத எதிர்ச் செயல்களும் தேவை. எல்லா வினைகளும் உடனே திரும்பி வருவதில்லை. சில சேமிக்கப்பட்டு எதிர்பாராத வழிகளில் இந்த பிறவியிலோ அல்லது அடுத்த பிறவியிலோ திரும்பி வரும் வேதங்கள் விளக்குகின்றன. "ஒருவன் தான் செய்வது போலவே ஆகின்றான். நல்ல காரியத்தால் ஒருவன் நல்லன் ஆகின்றான். தீயதனால் தீயவனாகின்றான்" (யசுர் வேதம், பிரிஹதரன்யகா உபநிஷதம்)

**மறுபிறவி**

புனர்ஜன்மம் எனப்படும் மறுபிறவி. இயற்கையான பிறப்பு, இறப்பு மற்றும் மறுபிறப்பு நடைமுறையாகும். இறப்பின் போது நாம் இந்த பூத உடலை உதறிவிட்டு, சூக்கும உடல்களில் இருந்தவாறு உள் உலகங்களில் தொடர்ச்சு பரிமாணம் அடைகின்றோம். மீண்டும் ஒரு பிறப்புக்குள் நுழையும் முன் பல காலமாக மறுபிறவி கோட்பாடு இந்துக்களிடையே மிகப்பெரும் ஆறுதல் கூறாக இருந்துள்ளது, சாவைப் பற்றிய பயத்தை நீக்கி நாம் வாழும் உடல் அல்ல நாம். ஆனால் அனாதியான ஆத்மா, அது பரிணாம வளர்ச்சியில் சம்சாரத்தில் பல உடல்களில் வாழ்ந்துள்ளது. இறப்புக்குப் பின் பார்வைக்கு அகப்படாத உலகங்களில் நாம் தொடர்ந்து இருந்து உலகத்தில் செய்த காரியங்களுக்கு சுகத்தையோ துக்கத்தையோ அனுபவித்து மீண்டும் ஒரு பூதவுடல் கொண்ட பிறவிக்காக காத்திருப்போம். கடந்த பிறவிகளில் நாம் செய்த காரியங்கள் அடுத்தப் பிறவியின் நிலைமை மற்றும் மனப்பாங்குகளாக உருவாகின்றன. கர்மம் தீர்க்கப்பட்டதும் கடவுள் அறியப்பட்டதும் மோட்சம் அடையப்பட்டதும் விளைவாக மறுபிறவி நீங்குகின்றது. வேதங்கள் பகருகின்றன, "இறப்புக்குப் பின், ஆத்மா அடுத்த உலகுக்கு செல்கின்றது. தான் செய்த காரியங்களின் நுட்ப பதிவுகளை மனதில் தாங்கியவாறு அதற்கான பலன்களை அனுபவித்துப் பிறகு காரிய உலகமான இங்கு மீண்டும்.வருகின்றது. ஆக இச்சை உள்ளவருக்கு மறுபிறவி வாய்க்க தொடர்ந்து வழி உண்டு" (யசுர் வேதம், பிரிஹதரன்யகா உபநிஷதம்)

**எங்கும் தங்கும் தெய்வீகம்**

பல சமய நம்பிக்கைகளின் குடும்பமாதலால், இந்து மதம் பலதரப்பட்ட கோணங்களில் தெய்வீகத்தைப் பார்க்க முனைகின்றது. இருப்பினும் எல்லா இந்துவும், அந்த ஒரு, எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்கும் உச்ச பொருள், எது உபநிஷதங்களில் கூறப்பட்டு இருக்கின்றதோ, அதையே வணங்குகின்றனர். தீர்க்க உண்மைப் பொருளாக நோக்கின், கடவுள் தோற்றமின்றி, மாற்றமின்றி, கடந்த நிலையில், காலம் அகன்று, உருவம் அகன்று இடம் அகன்று தான் கடவுளாக உள்ளார். பரிசுத்த உணர்வாக இருப்பதால் கடவுள் ஆதிமூல தோற்றப் பொருள் தூய அன்பு மற்றும் ஒளியாகி அனைத்துத் தோற்றங்களிலும் வழிந்தோடி சர்வ காலங்களிலும் சர்வ இடங்களிலும் ஆதியந்தமில்லாத பேரறிவாளனாக, சக்தியாக நிற்கின்றார். மூல ஆத்மாவாதலால் கடவுள் நமது தனிப்பட்ட தெய்வமாகி மூன்று உலகங்களின் அதாரமாகி நம்மை காக்கும் வளர்க்கும் வழிகாட்டும் அப்பன் - அம்மை ஆகி உள்ளார். நம் வாழ்க்கையில் கடவுளின் அருளை வேண்டும். அதேவேளை நாம் அவன் / அவள் நமது ஆத்மாவின் சாரம் என்பதையும் நமது உயிரின் உயிர் என்பதையும் அறிந்து உள்ளோம். ஒவ்வொரு வழக்குச்சார்பும் ஏனைய கடவுள்களையும் அல்லது மகாதேவர்கள் கடவுளால் படைக்கப்பட்டு அவருக்கு பணி செய்து வணங்குவதாக நம்புகின்றனர். வேதங்கள் அறிவிக்கின்றன. “எண்ணிலடங்கத தோற்றங்களை உடைய கடவுளாகிய அவனது மகிமையாலே அனைத்தும் நிலைக்கின்றன. அணுவிலும் சிறிதாகி இருப்பினும் அனைத்துக்கும் படைப்பாளனாகி தன் படைப்பில் என்றும் வாழ்கின்றான். அன்பாகிய இக்கடவுளைக் காண்பவர்க்கு நிலைத்த அமைதி உண்டு. அனைத்துக்கும் தலைவனாகிய அவன் அனைத்தின் மத்தியிலும் மறைந்திருக்கின்றான். கால உலகை கண்காணிக்கின்றான். (கிருஷ்ண யசுர் வேதம், ஸ்வேதஸ்வதர உபநிஷதம்)4.14-15

தர்மம்

கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்த போது அதற்கு ஒரு நெறியையும் தோற்றத்தை ஆளுகின்ற சட்டங்களையம் வழங்கியுள்ளார். தர்மம் என்பது கடவுளின் தெய்வீகச் சட்டம் தோற்றத்தின் அனைத்து மட்டத்திலும் காணப்படும், நிலைபெறச் செய்யும், பிரபஞ்ச நியதி முதல் சமய மற்றும் நன்னெறி விதிகள் வரை நம்மை பிணைத்து சமூகமாக இருக்க வைக்கின்றது. ஆத்மாவின் தொடர்பில் தர்மம் ஆன்மீக வளர்ச்சிக்கு மிக தோதுவான நடத்தை சீரான நன்னடத்தை அது கடவுள் பற்று மற்றும் கோட்பாட்டு பயிற்சி கடமை மற்றும் கட்டாயம். நாம் தர்மத்தை பின்பற்றுகையில் நாம் பிரபஞ்சத்தை பற்றியிருக்கின்ற வழிகாட்டுகின்ற உண்மையுடன் ஒத்து வாழ்கின்றோம். ஆக இயற்கையிலேயே கடவுளுடன் நெருக்கத்தில் உள்ளோம். தெய்வீக சட்டத்துக்கு எதிரானது அதர்மம். ஒரு விதைக்கு வழக்கமான வளர்ச்சி எப்படியோ அது போலவே மனிதனுக்கு தர்மம் - இயற்புத் தன்மை மற்றும் குறிக்கோளைப் படிப்படியாக நிறைவேற்றுதல். திருக்குறள் (31 – 32) நினைவுறுத்துகின்றது. “வானுலகின் கீர்த்தியையும் மண்ணுலகின் செல்வத்தையும் தர்மம் வழங்குகின்றது. அதை விட பயனள்ள வேறு எது உள்ளது? தர்மத்தை விட பரிசழிக்கும் ஒன்றுமில்லை. அதை கண்டுகொள்ளாததை விட அழிவு வேறு இல்லை”.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிதல்

மருத்துவமனைக்குள் நுழைந்தேன். பார்வையாளர் அனுமதி நேரம் என்பதால் கூட்டம் அதிகம் இருந்தது. சரவணனின் அம்மா அனுமதிக்கப் பட்டிருந்த அறைக்குள் நுழைந்தபோது அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். தலையில் பெரிய கட்டு போடப்பட்டிருந்தது. மூன்று நாட்களுக்கு முன் தரையில் சிந்திக் கிடந்த எண்ணெயில் கால் வைத்து வழுக்கி கீழே விழுந்ததில் தலை தூணின் மீது விசையாக மோதியதில் ஏற்பட்ட காயம்.

பக்கத்தில் சரவணன் உட்கார்ந்திருந்தான். நான் நுழைந்ததைப் பார்த்ததற்கு அடையாளமாக தலையசைத்தான். நான் வாங்கிச் சென்றிருந்த அப்பிள்களை அங்கிருந்த சிறு அலுமாரியின் உள்ளே வைத்தேன்.


அம்மா எப்படி இருக்காங்க டாக்டர் என்ன சொல்றார்? என்றேன்.

உயிருக்கு ஆபத்தில்லே. ரொம்ப தேங்ஸ்டா என்றான்.

நன்றிக்கான பின்னணி புரிந்தது. அம்மாவுக்கு உடனடியாக ரத்தம் செலுத்தப்பட வேண்டும் என்றதும் நானும் சரவணனும் தான் ரத்தம் அளித்தோம்.

எனக்கு இந்த உறவுகளே வேணாம்னு தோணுது. அடுத்த தடவை பார்க்கும் போது இதை வெளிப் படையாகவே சொல்லிடப் போறேன். சமுதாயத்தின் மேலேயே வெறுப்பா இருக்கு என்ற போது அவன் கண்கள் சிவந்திருந்தன. நடந்தது தெரிந்தாலும் ஏற்கனவே சரவணன் சிலவற்றைச் சொல்லியிருந்தாலும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

சரவணனுக்கு இரண்டு அண்ணன்கள், ஒரு அக்கா. கொழும்பில் இருக்கும் பெரிய அண்ணன் இன்னும் அம்மாவைப் பார்க்க வரவில்லை. உயர் பதவி அதனால் உடனடியாக வரமுடிய வில்லையாம். தினமும் மூன்று முறை தொலைபேசியில் மட்டும் விசாரித்துக் கொண்டிருக்கிறானாம். பணம் தேவைன்னா தயங்காமக் கேளு என்ற அவனது பேச்சு சரவணனின் கோபத்தை இன்னும் அதிகமாக்கியிருந்தது. இரண்டாவது அண்ணனின் மைத்துனனுக்கு திருமணம். அதற்கான முக்கியத்துவம் அதிகமாகி விடவே என்ன செய்யிறது சரவணா, என் மனசெல்லாம் அம்மாகிட்டதான் இருக்கு. ஆனால் லலிதாவுக்கும் அண்ணன் கிடையாது. அதனால் நானும் அவளும் தான் இந்தக் கல்யாணத்துக்கு எல்லாமே செய்ய வேண்டியிருக்கு. ரெண்டு நாளிலே வரேன் என்று கண்டியிலிருந்து தொலைபேசியில் அழைத்துப் பேசியிருக்கிறான்.



அக்காள் உடனடியாக வவுனியாவில் இருந்து வந்துவிட்டாள். ஆனால், அவள் மகனுக்கு அரையிறுத்திதேர்வாம் நான் இருந்தால் தான் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமாவது படிப்பான் தவிர அம்மாவையும் தான் ஐ.சி.யூவில் இருந்து வெளியே மாத்திட்டாங்களே! சனிக்கிழமை வாறன் என்றபடி கிளம்பிவிட்டாள்.

சரவணண் கொதித்துக் கொண்டிருந்தான் பதினைந்து வருடத்துக்கு முன்னாலேயே எங்க அப்பா காலமானது உனக்குத் தெரியும் எவ்வளவு கஷ்டப்பட்டு எங்களையெல்லாம் அம்மா வளர்த்திருப்பாங்க, அதற்கு இவங்க காட்டிற நன்றியைப் பார்த்தியா? இவங்க யாரும் இனிமேல் இங்கை வரவேண்டாம் என்று சொல்லிடப் போறன் என்றான்.


எனக்கு ஏனோ அவனிடம் துஸ்யந்தனின் அணுகுமுறையைப் பற்றி பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று தோன்றியது.

விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்தவள் சகுந்தலை பிறந்த குழந்தையைப் பார்க்க கூட மறுத்துவிட்டார் விசுவாமித்திரர். மேனகை மீண்டும் தேவலோகம் சென்று விட்டாள் சகுந்தலையை வளர்த்தவர் கண்வ முனிவர். அவரது ஆச்சிரமத்தில் தான் சகுந்தலை வளர்ந்தாள். இளமைப் பருவத்தை அடைந்தாள்.

தவம் புரிவதற்காக கண் முனிவர் வேறிடத்திற்கு சென்றிருந்தபோது மன்னன் துஸ்யந்தன் மான் ஒன்றைத் துரத்தியபடி ஆச்சிரமத்தின் பக்கம் வந்தான். சகுந்தலையைக் கண்டவன், தான் வேடையாட வந்ததையே மறந்தான். இருவரும் காதல் கொண்டனர் கலந்தனர் விரைவில் முறைப்படி வந்து அவளை மணப்பதாக கூறிவிட்டு நாடு திரும்பினான் துஸ்யந்தன் புறப்படுவதற்கு முன் தனது மோதிரம் ஒன்றை அவள் விரலில் அணிவித்தான்.

சகுந்தலை கர்ப்பம் அடைந்தாள். அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். நடந்ததை அறிந்த கண்வர் சகுந்தலையையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு துஷ்யந்தனின் அரசவைக்குச் சென்றார். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சகுந்தலை கூற, நீ யார்? என்று கேட்டான் துஷ்யந்தன். துர்வாசரிடமிருந்து சகுந்தலை பெற்ற சாபத்தால் துஷ்யந்தன் சகுந்தலையை மறக்கும் படி நேர்ந்தது.

கண்வர் நடந்ததை நினைவுபடுத்த மன்னன் மறுத்தான். நான் சகுந்தலையை இதற்கு முன் சந்தித்ததே இல்லை என்றான். அவன் அளித்த மோதிரத்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாக காட்டலாம் என்று நினைத்த சகுந்தலைக்கு அதிர்ச்சி! மோதிரத்தைக் காணோம். அவள் நதியில் குளித்தபோது அந்த மோதிரம் கழன்று நதிக்குள் விழுந்துவிட்டிருந்தது.

இந்த நிலையில் மீனவன் ஒருவன் அந்த மோதிரத்துடன் அரசவைக்கு வந்தான். மன்னா பெரிய மீன் ஒன்று என் வலையில் பிடிபட்டது. அதை வெட்டிய போது ராஜ மோதிரம் கிடைத்தது என்றான். மோதிரத்தைப் பார்த்ததும் துஷ்யந்தனுக்கு நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்தது. கண்வரையும் சகுந்தலையையும் அரசவைக்கு வரவழைத்தான்.

இந்தச் சிறுவனின் தந்தை யார் என்பதைக் கண்டுபிடித்து விட்டாயா? என்று கேட்க சகுந்தலை மிகவும் கலங்கிப் போனாள். இதைக் கேட்கவா மன்னன் தன்னை மீண்டும் வரவழைத்தான்? எனத் துடித்துப் போனாள். அப்போது வானிலிருந்து ஓர் அசரீரி கேட்டது. துஷ்யந்தா, சகுந்தலை உன் மனைவி தான். உனக்கு அவளுக்கும் பிறந்தவன் தான் இந்தச் சிறுவன். முனிவரின் சாபத்தால் இதை நீ மறக்க நேர்ந்தது. நீ சகுந்தலையை அரசியாக ஏற்பது தான் நியாயம்! என்றது. உடனே சிம்மாசனத்தில் இருந்து இறங்கி வந்த துஷ்யந்தன் கண்வரின் காலில் விழுந்தான். சகுந்தலையிடம் மன்னிப்பு கேட்டான். தன் குழந்தையை வாரி அணைத்து கொண்டான்.

இந்தக் கதையை சொன்னதும் சரவணன் கோபம் கொண்டான். சரியான கிராதகனாக இருக்கிறானே! மோதிரத்தைப் பார்த்ததும் அவனுக்கு உண்மை விளங்கிவிட்டதே. அப்புறமும் எதற்காக அசரீரி சொல்லும் வரை தாமதித்தான்? என்று கேட்டான்.

அவனுக்கு இன்னும் தெளிவாக விளக்கினேன். ராஜசபையில் அத்தனை பேர் நடுவில் சகுந்தலையை தனக்கு தெரியாது என்று கூறியிருக்கிறான் துஷ்யந்தன். மோதிரத்தைப் பார்த்ததும் நினைவு வந்து விட்டது தான், ஆனாலும் அக்கணமே சகுந்தலையை அவன் ஏற்றுக் கொண்டிருந்தால் மக்கள் என்ன நினைத்திருப்பார்கள்? மன்னன் முதலில் பொய் சொல்லியிருக்கிறான். அவன் ஏமாற்றுக்காரன் என்று எண்ணி இருப்பார்கள். அல்லது சகுந்தலை யாருக்கோ பெற்ற பிள்ளையை பெருந்தன்மையாக நம் மன்னர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று யோசித்திருப் பார்கள். இந்த இரண்டுமே விரும்பத் தகாதவை. எனவே இறைவனே சரியான தீப்பளிப்பான் என்று காத்திருந்தான். அசரீரி வெளிப்பட்டதும் சகுந்தலையை சேர்த்துக் கொண்டான்.

இப்போது புராணத்திலிருந்து நிதர்சனத்துக்கு திரும்பினேன். கோபத்தில் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது. எதிராளியின் இடத்தில் இருந்து யோசித்துப் பார்க்க வேண்டும். துஷ்யந்தன் கதையைச் சொன்னதும் அவன் மீது உனக்கு கோபம் வந்தது. அதனால் தான் அவனது நிலைப்பாட்டை உனக்கு எடுத்துச் சொன்னேன். ஆக உறவுகளையும் நட்புகளையும் கத்தரித்துக் கொள்ளக் கூடாது என்று கூறி முடித்தேன்.

எப்போது கண் விழித்தார் என்று தெரியவில்லை. மெல்லிய குரலில் உன் நண்பன் சொல்றது உண்மை தான் சரவணா என்றார, சரவணனின் அம்மா. பாசத்துடன் அவர் கைகளைப் பற்றிக் கொண்டான் சரவணன். அவன் முகத்தில் இப்போது கோபம் இல்லை. புரிதல் இருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிறிஸ்துவராய் பிறந்தார் இந்துவாய் மலர்ந்தார்

துு.சுசிகலா

யார் இந்த வெள்ளைக்காரர் என்று நீங்கள் பார்ப்பது தெரிகிறது. இவர் ஒரு கிறிஸ்துவ தந்தைக்கும் யூத தாய்க்கும் பிறந்தவர். தென் ஆபிரிக்காவில் பிறந்து கிறிஸ்துவ ஞானஸ்தான பெற்றார். பின் இஸ்ரேல் சென்ற இவர், அங்கு பத்து வருடங்களுக்கு மேலாக யூதமதம், கிறிஸ்தவ மதம் மற்றும் இஸ்லாமிய மதங்கள் குறித்த தத்துவ கோட்பாடுகளை படித்தார். பின்னர் பாரதம் வந்து மூன்று வருடங்கள் சமஸ்கிருதம் பயின்று யோக வேதாந்தத்தையும் தத்துவங்களையும் கற்றறிந்தார். ரிஷிகேஷ், திருப்பதி, சென்னை மற்றும் வாரணாசிகளில் உள்ள குருகுல கல்வி மூலமாக இவர் இவற்றை பயின்றார்.



இவரை ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சாரியராக நியமனம் செய்தார். மறைந்த ஸ்ரீமான் "வரத யதிராஸ ஜீயர்" ஸ்வாமிகள். இவரின் அர்ப்பணிப்பு உணர்வை கண்டு மகிழ்ந்த ஜீயர் ஸ்வாமிகள் மற்றவர்களுக்கு தீக்ஷை கொடுக்க இவரை பணித்ததோடு மட்டும் இல்லாமல் கோவில்களில் குருக்களாகவும் வாழ்வியல் ரீதியான (ஹோமங்கள் யாகங்கள்) சடங்குகளை செய்யக்கூடிய புரோகிராக செயலாற்றி தர்மத்தை பரப்புமாறு இவரை பணிந்தார்.



1982 அவுஸ்திரேலியா சென்ற இவர் அங்கு இந்து பண்டிதராகவும் ஆசிரியராகவம் வேதாந்த தத்துவங்களை பலருக்கு கற்றுக்கொடுத்தார். அமெரிக்கா தென் ஆபிரிக்கா, பாலி தீவுகள் என இவர் பல இடங்களுக்கு சென்று தர்ம நெறிகளை பரப்பினர்.


ஆச்சர்யா ஸ்ரீ ராம ராமானுஜர் அவுஸ்திரேலியா அமெரிக்கா மற்றும் "பாலி"யில் பல யோக பள்ளிகளிலும் தத்துவ கருத்தரங்கு களிலும் பெரிதும் ஈடுபட்டு வருகிறார். இவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி, அரபி (பேச்சு மொழி) ஆகியவற்றில் புலமை வாய்ந்ததோடு மட்டுமல்லாமல் நம் தமிழிலும் சரளமாக பேசக் கூடியவர்.

ஒருவன் பிராமணனாக இருப்பதற்கு அவர்களின் பிறப்பு ஒரு காரணி இல்லை என்பதற்கு ஸ்ரீ ராமானுஜ ஆச்சார்யா சிறந்த உதாரணம். இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் உதாரணங்களை உண்டாகிய ஜீயர் ஸ்வாமிகளின் பாதமலர் பணிகிறோம். இத்தகைய சிந்தனையால் தான் இந்து மதம் மேலும் மேலும் விரிவடையும். நமது உயரிய சித்தாந் தங்கள் உலகம் முழுவது பரவவும் ஜாதி, நிறம், மொழி வித்தியாசம் இல்லாமல் அனைத்து மனிதர்களும் இறை தொண்டாற்றலாம் என்ற கோட்பாட்டை கொண் ஸ்ரீ வைஷ்ண வத்தை நிறுவிய



ஸ்ரீமத் ராமானுஜரின் உயரிய எண்ணம் மேலும் மேலும் ஸ்ரீ ராம ராமானுஸர் ஆச்சாரி போன்றவர்கள் மூலமாக நடைபெறுவது உறுதி.



எங்களுக் கென்னவோ இவரின் புகைப்படத்தை பார்த்தால் இவர் சமய சமரசம் பேசும் எம்மவரையும் இந்து மதத்தை விட்டு மதம் மாறியவர்களையும் பாரத்து "ஹிந்து தர்மத்தை பற்றி என்னடா உங்களுக்கு தெரியும்?, மூளைச் சலவை செய்யப்பட்ட முண்டங்களே!" என்று ஒரு ஏளன புன்னகை பூப்பது போல் உள்ளது. உங்களுக்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் காக்காவிட்டாலும் புண்ணியம் காக்கும்

பொதுவாகவே தான தர்மங்கள் செய்வது மிகவும் சிறந்தது. நம்மை காக்கும் கவசம் போன்றது. அதிலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மஹாயள அமாவாசை போன்ற பித்ருக்களுக்குரிய தினங்கள், சந்திர சூரிய கிரகணம் ஏற்படும் புண்ணிய காலங்களில், சிவராத்திரி, விஜயதசமி, கார்த்திகை போன்ற பண்டிகை காலங்களில் சிவராத்திரி வைகுண்ட ஏகாதசி போன்ற முக்கிய விரத நாட்களில், தான தருமங்கள் செய்வது பன்மடங்கு பலன் தரக்கூடியது. ஒருவரது விதியையே மாற்றக்கூடியது. எப்படி என்கிறீர்களா?

**கீழ்கண்ட கதையை படியுங்கள் ......... பிச்சைக்காரனை விரட்டிய கருமிக்கு கிடைத்த நற்கதி!**

அந்த ஊரில் பெரிய கருமி ஒருவன் இருந்தானாம். தர்மம் என்ற சொல்லையே அறியாதவன் அவன். பிச்சைக்காரர்களுக்கு மறந்தும் கூட தர்மம் செய்யாதவன். அவன் வீட்டிற்கு தெரியாத்தனமாக எவராது வந்து பிச்சை கேட்டால் நாயை விட்டு ஏவாத குறையாக விரட்டி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். ஏனெனில் அவன் வீட்டு முற்றத்தில் உள்ள தோட்டத்தில் பூச்செடிகள் உண்டு. பிச்சை கேட்டு வருகிறவர்கள்போகும் போது ஏதாவது பூவை பறித்துக் கொண்டு சென்று விட்டால்? அந்த அச்சத்தில் யாசகம் கேட்போர் வாயிலில் நிற்கக் கூட அனுமதியில்லை.

அன்று ஆடி அமாவாசை உள்ளே அமர்ந்து இவன் மதிய உணவை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தான். வாசலில் சத்தம் “ஐயா சாமி ஏதாவது தர்மம் போடுங்க .... சாப்பிட்டு நாலு நாள் ஆச்சு சாமி ..........” உட்கார்ந்தவறே வாயிலை நோக்கி எட்டிப் பார்த்தான். ஒரு வயதான பரதேசி கையில் திருவோட்டுடன் நின்று கொண்டிருந்தான்.

இவன் தான் பிச்சைக்காரர்களை ஏறெடுத்தும் கூட பார்க்க விரும்பாத வனாயிற்றே ........ எதுவுமே அறியாதவன் போல் அவன் சாப்பாட்டில் குறியாக இருந்தான்.

பிச்சைக்காரனோ இவனை பற்றி கேள்விப்பட்டிருப்பான் போல இவனிடம் இன்று யாசகம் பெறாமல் போவதில்லை என்கின்ற உறுதியுடன் நின்று கொண்டிருந் தான். இவனோ “இல்லை போய்வா” என்று சொல்ல கூட விரும்பாமல் உணவில் லயித்திருந்தான்.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த பிச்சைக்காரன் இவன் வீட்டு முற்றத்தில் வந்து நிற்க. அதை பார்த்த இவனுக்கு கோபம் தலைக்கேறியது. சாப்பிடுவதை நிறுத்தி விட்டு எழுந்து ஓடி வந்தான்.

“யோவ் அறிவில்லையா? உனக்கு நீ பாட்டுக்கு உள்ளே வர்றியே ........ போ முதல்ல இங்கேயிருந்து .......... தர்மமும் இல்லை கிர்மமும் இல்லை”

“ஐயா சாப்பிட்டு நாலு நாள் ஆச்சி .... ஏதாவது பழையது இருந்தா கூட கொடுங்க போதும்”

“அதெல்லாம் ஒன்றும் இல்லை .........முதல்ல இடத்தை காலி பண்ணு”

அந்த பரதேசியோ இவனிடம் ஏதாவது பெறாமல் அந்த இடத்தை விட்டு நகர்வதில்லை என்று உறுதி பூண்டு விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விடாக்கண்டன் என்றால் இவன் கொடாக்கண்டன் அல்லவா ......?

பாதி சாப்பாட்டில் இருந்து வேறு எழுந்து வந்திருந்த படியால் இவன் கோபம் தலைக்கேறியது தனது எச்சில் கையை பிச்சைக்காரனை நோக்கி ஓங்கி அவனை அடிக்கப் போனான்.

பிச்சைக்காரன் இதை எதிர்பாராது மிரண்டு போய் விட்டான். அவன் சற்று பின்வாங்க .......... இந்த அரிபரியில் இவனது எச்சில் கையில் இருந்த ஒர சோற்றுப்பருக்கை பறந்து போய் பிச்சைக்காரனின் திருவோட்டில் விழுந்தது. பிச்சைக்காரன் முனகியபடியே செல்ல ........ இவன் மீண்டும் வீட்டிற்கு வந்து உணவை தொடர்ந்து சாப்பிடலானான்.

ஆண்டுகள் உருண்டன. ஒருநாள் இவன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்து இறந்து விடுகிறான்.

எமதுாதர்கள் இவனை சங்கிலியால் பிணைத்து இழுத்து சென்று எமதர்மன் முன்னர் நிறுத்துகின்றனர்.

இவனது கணக்குகளை ஆராய்ந்த சித்திரகுப்தன் எமதர்மனிடம் ...... பிரபோ ..... வாழ்வில் மறந்தும் கூட புண்ணியச் செயலை செய்யாதவன் இவன். நரகத்தில் உள்ள அத்தனை தண்டனைகளும் இவனுக்கு பொருந்தும்" என்று கூற ........ "என்ன சொல்கிறாய் .... சித்திரகுப்தா ..... மறந்தும் கூட புண்ணியச் செயலை செய்ததில்லையா?"

"ஆம் பிரபோ!" என்கிறான் சித்திரகுப்தன். "இல்லை சித்திரகுப்தர் மனிதர்களாக பிறந்தவர் எவரும் 100% பாபம் அல்லது 100% புண்ணியம் என்று செய்திருக்க முடியாது. நன்றாக மீண்டும் இவன் கணக்கை பார் ..........."

மறுபடியும் இவன் ஜனன மரண வாழ்வியல் கணக்கை பார்த்த சித்திரகுப்தன் "இல்லை பிரபோ ........ இவன் புண்ணியச் செயலையே செய்ததில்லை" என்று அறுதியிட்டு கூறிவிடுகிறான்.

இருப்பினும் எமனுக்கு திருப்தியில்லை.

"இவன் முகத்தை பார்த்தால் தன்னை மறந்து இவன் ஏதோ புண்ணியச் செயலை செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது ...... எதற்கும் அஷ்டதிக் பாலகர்களில் மற்றவர்களை கேட்டு விடுகிறேன்" என்றவன் அஷ்டதிக் பாலகர்களில் மற்றவர்களை அங்கு வருமாறு பணிக்க ........ அடுத்த நொடி இந்திரன், அக்னி, நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலான அஷ்ட திக்பாலகர்கள் அங்கு தோன்றுகின்றனர். (நம்மை 24 மணிநேரமும் கண்காணிப் பவர்கள் இந்த அஷ்டதிக்பாலகர்கள் இவர்களிடமிருந்து நாம் செய்யும் எந்த பாவ / புண்ணியகாரியங்களும் தப்பாது. அஷ்டதிக் பாலகர்களில் எமனும் ஒருவன்!!)



"தர்மராஜா எங்களை அழைத்ததன் காரணம் என்னவோ?" என்று அவர்கள் வினவ, இந்த மானிடனின் வாழக்கை கூறுகிறான் எமதர்மன்.

"இவன் இவனையாறியாமல் ஏதேனும் புண்ணியம் செய்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று என உள்மனம் கூறுகிறது. சித்திரகுப்தனால் அதை கணிக்க முடியவில்லை. நீங்கள் தானே மக்களின் பாப புண்ணிய செயல்களை எப்போதும் கண்காணித்து வருபவர்கள் ..... இவனை அறியாமல் இவன் ஏதாவது புண்ணியச்செயலை செய்திருக்கிறானா?" அனைவரும் உதட்டைப் பிதுக்குகின்றனர். ஆனால் வாயுதேவன் மட்டும் ....... "நீதிதேவா ...... இவன் இவனை அறியாமல் ஒரு புண்ணியச் செயலை செய்திருக்கின்றான். மகத்துவம் மிக்க ஆடி அமாவாசை தினத்தன்று தன்னிடம் யாசகம் கேட்டு வந்த பிச்சைக்காரனை இவன் அடித்து விரட்ட எத்தனித்த போது இவனது கைகளில் ஒட்டியிருந்த சோற்று பருக்கை பறந்து போய் பிச்சைக்காரனின் திருவோட்டில் விழுந்தது. அந்த பருக்கையை சுமந்து சென்றது நான் தான்!" என்றான்.

அதை கேட்ட எமன் "நான் கணித்தது சரியாகி விட்டது. இவன் செயல் தீயநோக்கோடு அமைந்திருந்தாலும் அவனையறியாமல் பித்ருக்களுக்குரிய ஆடி அமாவாசையன்று இவன் ஒரு சோற்று பருக்கை தானம் செய்த படியால் இவனது தவறுகள் மன்னிக்கப்படுகின்றன. மீண்டும் பூலோகத்தில் நல்ல குலத்தில் பிறந்து உத்தமமான செயல்களை செய்து சுவர்க்கத்தை அடைவானாக. அதே சமயம் யாசகம் கேட்டவரை அடிக்க பாய்ந்த காரணத்தால் அதற்குரிய தண்டனையையும் பூலோகத்தில் அனுபவிக்க வேண்டும்" என்று அருளாசி வழங்கி அனுப்பி விடுகின்றான்.

அடுத்த பிறவியில் நல்ல குலத்தில் பிறக்கும் அவன் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்ந்து வருகிறான். தான் தருமங்களும் செய்து வருகிறான். இருப்பினும் முன்ஜென்மத்தில் யாசகம் கேட்டோரை அடிக்க பாய்ந்ததால் ஏற்பட்ட பாவத்தின் காரணமாக முதுமைக்காலத்தில் பக்கவாதம் ஏற்பட்டு ஒரு கை செயலிழந்து விடுகிறது. இருப்பினும் தனது முன்வினையால் இது நமக்கு ஏற்பட்டுள்ளது போலும் என்று தன்னை தேற்றிக்கொண்டு இறுதி வரையில் தர்மம் தவறாது வாழ்ந்து மறைந்தான்.

இதை படித்தவுடன் இதிலிருக்கும் நீதியை தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர ஆடி அமாவாசையன்று ஒரு சோற்றுப்பருக்கை தானம் செய்தால் கூட சொர்க்கம் தான் என்று தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தெரியாமல் செய்த ஒரு நல்ல செயலுக்கே இத்தனை மகிமை என்றால் விஷேட நாள் கிழமை ஆகியவற்றின் மகத்துவத்தை அறிந்து மனமுவந்து செய்யும் தான தர்மங்களின் பலன் எத்தகையாதாக இருக்கும் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள். (இந்த கணக்கு பார்ப்பதெல்லாம் ஆரம்பத்தில் தான் நற்செயல்கள் மற்றும் புண்ணிய காரியங்களின் மேல் உங்களுக்கு ஈடுபாடு வந்து விட்டால் ஒரு கட்டத்தில் அதை ஒரு கடமையாகவே செய்ய ஆரம்பித்து விடுவீர்கள்!!!)

பாவச் செயல்களை செய்பவர்கள் தங்களையுமறியாமல் நல்ல செயல்களை செய்யும் போது இறைவன் அவர்களின் தவறுகளை மன்னித்து அவர்கள் செய்த நல்ல செயல்களை மட்டும் கருத்தில் கொண்டு அவர்களை தடுத்தாட் கொள்கிறான். இறைவனது இந்த குணம் தான் இன்று பலரது வாழ்க்கையை தடம் மாற்றியிருக்கிறது. எனவே உங்கள் பிள்ளைகளுக்கு பணத்தை மட்டும் சேர்க்காமல் புண்ணியத்தையும் சேர்த்து வாருங்கள். பணம் காக்கா விட்டாலும் புண்ணியம் காக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்களே! ஞாபக சக்தி பெருக வேண்டுமா?

# தலையில் குட்டித் தோப்புக்கரணம் போட்டுப் பிள்ளையாரை வழிபடுங்கள்

இந்துத் தெய்வங்களிற்குரிய வழிபாட்டு முறைகள் பல. உடல், உள நலத்தைப் பேணி வளர்த்து வருவதற்கு உதவுகின்றன. கணபதியை வழிபடும் முறை, பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம், திரியாங்க நமஸ்காரம், ஆலயத்தை வலம் வந்து வழிபடுதல், அங்கப்பிரதிஷ்டை, செய்தல் அடியழித்தல் என்பன அவற்றுள் சில.

இந்துத்தெய்வங்களில் முதல் வணக்கத்திற்குரியவர் பிள்ளையார். இவர் பிள்ளைகளின் தெய்வமுமாவார். இவரைத் தலையில் மூன்று முறை குட்டிக் கும்பிட்டுத் தோப்புக்கரணம் போட்டு வழிபட வேண்டும் எனக் கணேச புராணம் கூறும். இவ்வாறு வழிபடுவதன் மூலம் ஒருவர் தமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணிக்கொள்ள முடியும் என இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. உடல், உள ஆரோக்கியம் உள்ளவரிடத்திலேயே ஞாபகசக்தி வளர்ந்து வரும்.

மகாஞானியான அகத்திய முனிவர் தான் அறிவுக் குறைவு காரணமாக சிறுவனாக வந்த பிள்ளையாரை தலையில் குட்டித் தண்டிக்க முற்பட்டார். அவ்வேளை கணபதி காட்சி கொடுத்ததும், தன் அறியாமையையுணர்ந்து கொண்டு தன் தலையிலே குட்டித் தன் அறியாமையை அகற்றி அறிவுக்கண்ணைத் திறந்து கொண்டார்.

மூளையின் சிந்திக்கும் திறன் குறையும் போதே ஒருவருக்கு அறியாமை ஏற்படுகின்றது. அந்த அறியாமையை அகற்றி அறிவுக் கண்ணைத் திறப்பதற்காகவே அகத்தியர் தலையில் குட்டிக்கொண்டார். இந்தக் குட்டுதலின் மூலம் தலையில் இருந்து மூளைக்குச் செல்லும் நரம்பு மண்டலங்கள் தூண்டப்பட்டு மூளைக்குச் செல்லும் இரத்தோட்டம் விரைவுபடுத்தப்படுகின்றது. மூளையின் செயற்திறன் அதிகரிக்கச் செய்யப்படுகிறது. இதன் மூலம் ஞாபகம் பிறக்கிறது. ஞாபகசக்தி வளர்கிறது. எனவே தான் இந்து தமிழ் பாரம்பரியக்கல்வி முறையில் நின்று கல்வி புகட்டிய எமது புலவர்களும், பண்டிதர்களும், பாடங்களில் தவறு விடும் மாணவர்களிற்குத் தலையிலே குட்டிக்காதினை முறுக்கித் தண்டனை வழங்கியிருந்தனர். இதன் தாற்பரியம் யாதெனில், செயலற்றிருக்கும் மூளையின் செயற்பாட்டைத் தூண்டி மாணவனின் அறிவுக்கண்ணைத் திறக்கச் செய்வதாகும்.

மேலும் காதின் சோணையினைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடும் போது காதிலிருந்து மூளைக்குச் செல்லும் சில நரம்புகளின் தூண்டல்கள் இடம் பெற்று மூளையின் செயற்திறன் மென்மேலும் அதிகரிக்கச் செய்ப்படுகின்றது. இது ஒருவரின் ஞாப்கசக்தியை மென்மேலும் பெருக்கச் செய்கின்றது.

விஞ்ஞான பூர்வமான இவ்விளக்கத்தை ஆராய்ந்து பார்த்த அமெரிக்க விஞ்ஞானிகள் தங்கள் நாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களின் ஞாபக சக்தியை விருத்தி செய்வதற்காக பாடசாலைகளில் சிறந்த யோகாசனமாக இதனை பயிற்றுவித்து வருகின்றனர்.

விஞ்ஞானம் கூறும் இந்த அற்புத விளக்கத்தை பிள்ளையார் வழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் போது இந்துக்களின் மெய்யான சிந்தனைகளில் புதைந்திருக்கும் விஞ்ஞான உண்மைகளைக் கண்டு நாம் ஆச்சரியப்படலாம். அதிசயிக்கலாம்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஞாபக சக்தியை பெருக்கிக் கொள்ள பல வகையான மருந்து மாத்திரைகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இவை உடலுக்கு பக்க விளைவுகளைக் கொடுக்க வல்லன. ஆனால் இந்துசமயம் இறைவழிபாட்டின் பெயரால், இயல்பாகவே ஒருவரின் ஞாபகசக்தியைப் பெருக்கிக் கொள்ளும் வழிமுறையை வகுத்துத் தந்திருப்பதையிட்டு இந்துக்கள் என்ற வகையில் நாம் பெருமைப்படலாம்.

எனவே! அன்பான பள்ளி மாணவர்களே! பெரியோர்களே! சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி காலையும், மாலையும் கடவுளை வணங்கும் போது பிள்ளையாரைக் குட்டிக் கும்பிட்டுத் தோப்புக்கரணம் போட்டு வழிபட்டு வாருங்கள். இதனூடாக உங்கள் ஞாபகசக்தியைத் தினம் தினம் பெருக்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்.

## இந்து சமய பொது அறிவு வினாவிடை

01. இந்து ஒருவன் நித்திரை விட்டு எழுந்திருக்க வேண்டிய காலம் எது?
02. பிரம்மோ உற்சவ காலப்பகுதி என்பது எது?
03. பிரம்மோற்சவ காலத்தின் இந்துக்கள் செய்ய வேண்டிய கருமங்கள் எவை?
04. பிரம்மோற்சவ காலத்தில் ஏன் கல்வி கற்க வேண்டும்?
05. இந்து சமயத்தின் மூலநூல் எது?
06. வேதங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
07. மனம் உள்ளம் என்பது என்ன?
08. ஐம்பொறிகள் எவை?
09. ஐம்புலன்கள் எவை?
10. ஐம்பெரும் பூதங்கள் எவை?

1. பிரம்மோற்சவ காலப்பகுதி
2. அதிகாலை 4.30 முதல் 5.00 வரை
3. 1. தீபமேற்றி இறைவழிபாட்டில் ஈடுபடுதல்.
   2. மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய காலம்.
4. பிரம்மனுடைய மனைவி சரஸ்வதிக்குரிய காலமாக இருப்பதனால் இவ்வேறை உள்ளம் அமைதியாகவும், புத்தி கூர்மையாகவும் இருப்பதனாலும் கற்கும் விடயங்கள் இலகுவில் மனதிலே பதியும்.
5. வேதங்கள்
6. நான்கு வகை
   1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்மம்
7. ஒருவரது சிந்தனைகளின் தொகுப்பே மனம், உள்ளம் எனப்படும்.
8. மெய், வாய், மூக்கு, செவி, கண்
9. உணர்தல், பேசுதல், முகர்தல் (மணத்தல்), கேட்டல், பார்த்தல்.
10. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

தொகுப்பு :- ப.வித்தியா
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயம் தெளியரங்கு

இலங்கை வாழ் இந்துப் பெருமக்களே! இலங்கைத் திருநாடு எங்ஙனமும் பரந்து வாழும் இந்து மக்களிடையே நிலவி வரும் இந்து சமயப் பண்பாட்டு விடயங்களில் இந்துத்தெய்கள் பற்றிய இதிகாசபுராணச் செய்திகளில், இந்துசமய வழிபாடுகளில் இந்து சமய வரலாறு தொடர்பான விடயங்களில் பல்வேறுபட்ட ஐயங்கள் நிலவி வரலாம்.

இவை தொடர்பான உங்களது ஐயங்களை இப்பகுதிக்கு நீங்கள் எழுதியனுப்பினால் இயலுமானவரை உங்கள் ஐயங்களைப் போக்குவதற்கு "இந்துக்களின் குரல்" முயற்சி செய்யும் என்பதைப் பணிவுடன் தெரிவத்துக் கொள்கிறது.

ஐயம் - 1

1. **இந்துத் திருமண வைபங்களில் மணமக்களை ஆசீர்வதிக்கும் போது பாதாதிகேசமாய் ஆசீர்வதிப்பதா? கேசாதிபாதமாய் ஆசீர்வதிப்பதா? சரியான முறை**

திருமதி.ஆ.ரவீந்திரன்
கல்வியங்காடு

இந்துசமயத்தில் ஆசீர்வதிக்கும் முறைகள் பலவிருப்பினும் முக்கியமாக ஒருவரை ஆசீர்வதிப்பதற்கு இருமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்று ஒருவரைப் பாதாதிகேசமாகப் பாதத்திலிருந்து ஆசீர்வதிப்பது இது மரணக்கிரியையோடு தொடர்படையது. இறந்தவருக்கு பாதத்திலிருந்து அரிசி முதலியவற்றைப் போட்டு ஆசீர்வதிப்பது. மற்றது கேசாதி பாதகமாக ஒருவரை ஆசீர்வதிப்பது அதாவது திருமணத்தின் போது அரிசி, மஞ்சள், பூ என்பன கொண்டு மணமக்களைக் தலையில் இருந்து கால் வரை ஆசீர்வதித்தல். இவ்வாறு ஆசீர்வதிக்கும் போது ஆசீர்வதிப்பவர் மணமக்கள் ஆல் போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி பதினாறு செல்வங்களும் பெற்றுப் பெருவாழ்வு பெறவேண்டும் என வாழ்த்தி ஆசீர்வதித்தல் வேண்டும். இவற்றை விடத்திருமணத்தின் போது மணமகன் மணமகளிற்கு தாலிகட்டும் போது அவர்களது தலையில் பூவைத்தூவி ஆசீர்வதிப்பதுமுண்டு.

ஐயம் - 2

**திருமண வைபவத்தின் போது மணமக்களிற்கு ஆச்சாரியரால் அருந்ததி காட்டுவதன் நோக்கம் யாது?**

திரு.கா.விமலநாதன்
சாவக்சேரி

இந்து சமய மரபுப்படி அருந்ததி என்பது வசிஷ்ட மாமுனிவரின் மனைவியைக் குறிக்கும். 27 நட்டசத்திரங்களில் ஒன்றான அருந்ததி நட்சத்திரம் காணப்படுகின்றது. அருந்ததி எப்போதும வசிஷ்ட மாமுனிவரைப் விட்டுப் பிரியாது வாழ்ந்து வந்தவர். எனவே மணமக்களும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாது ஐக்கியமாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்காக அருந்ததி நட்சத்திரத்தை திருமண வைபவத்தின் போது காட்டும் மரபு வந்தது. முன்னைய காலங்களில் திருமணங்கள் இரவிலே இடம் பெற்றிருந்த காரணத்தினால் அருந்ததி காட்டும மரபு இருந்து வந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் திருமணங்கள் பெரும்பாலும் பகல் வேளையில் இடம் பெற்று வருவதனால் இந்த மரபு அற்றுப் போவதை அவதானிக்கலாம். மறைந்து வரும் இந்துப் பாரம்பரியங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் வியக்கும் தமிழனின் கட்டிடக் கலைக்கு கட்டியம் கூறும் "அங்கோர்வாட்" ஆலயம்

**சரத்குமார்**

இது வரை நம் தமிழர்களின் சாதனைகள் பற்றி நாம் தெரிவித்திருந்த தகவல்களிலேயே மிக சிறந்த ஒன்று இதுதான்! இந்த அதிசயத்தைப் நம் மக்களுடன் பகிர்ந்து கொள்வதையிட்டு நாம் பெருமையடைகிறோம். ஆம் உலகிலேயே மிகப்பெரிய வழிபாட்டு தலம் "கம்போடியோ" நாட்டில் நம் கலைத் திறமையை உலகிற்கே காட்டிய "அங்கோர் வாட்" கோயில் இரண்டாம் "சூர்யவர்மன்" இந்த இடத்தை கைப்பற்றிய வுடன் இந்த பிரம்மாண்ட கோயிலை இங்கு கட்டினான். இந்த இடம் தான் அவனின் தலை நகரமாக்கப்பட்டது. ஒரு பெருமையாக விஷயம் சொல்லட்டுமா? இந்த கோயில் தான் இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத் தலங்களிலேயே பெரியது!!



இந்த கோயிலை ஒரு கலைப் பொக்கிஷம் என்றே கூறலாம். திரும்பிய திசை எல்லாம் சிற்பங்களை வடித்துள்ளனர். இந்த கோயிலின் ஒரு பக்க சுற்று சுவரே 3.6 கிலோமீற்றர்கள்!!! அப்படி என்றால் இந்த கோயில் எவ்வளவு பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் என்பதை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் (மீண்டும் ஒரு முறை) இதன் சுற்று மட்டுமே 3.6 கிலோமீற்றர்கள்!!!


இந்த கோயிலின் ஆரம்பக்கட்ட பணியானது பனிரெண்டாம் நூற்றாண்டின் முதற் பாதியில் தொடங்கியது. இருபத்தி ஏழு வருடங்கள் இந்த இடத்தை ஆண்ட "சூர்யவர்மன்" இறக்கும் சில ஆண்டுகள் முன்பு இதன் வேலைகள் நிறைவடைந்தன. இதன் பின்னர் ஆறாம் "ஜெயவர்மன்" கைக்கு மாறியது. பதினாறாம் நூற்றாண்டிற்கு பிறகு இந்த கட்டிடம் சிறிது சிறிதாக புறக்கணிக்கப்பட்டது. அடர்ந்த காட்டுக்குள் இது கட்டப்பட தனால் இது யார் கண்ணிற்கும் படாமல் சிதலமடயத் தொடங்கியது. பின்னர் 1586 ஆம் ஆண்டு "antonio da madalena" என்ற போர்சுகீசிய துறவியின் கண்ணில் பட்டது. அதை அவர் "is of such extraordinary construction that not possible it with a pen, particularly since it is like no other building in the world. It has tower and decoration and all the refinements which the human genius can conceive of." என்று கூறியுள்ளார்.

பின்னர் henri mouhot என்ற பிரெஞ்சு எழுத்தாளர் தன் புத்தகத்தில் இந்த கோயிலின் சிறப்பை வெளியிட்டவுடன் தான் இதன் புகழ் உலகம் முழுக்கும் பரவத் தொடங்கியது. அவர் அந்த புத்தகத்தில் One of these




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

temple- a rival to that of Solomon ,and erected by some ancient Michelangelo – might take an honorable place beside our most beautiful building by some ancient Michelangelo – might take an honorable place beside our sad contrast to the state of barbarism in which the nation is now plunged என்று குறிப்பிட்டுள்ளார்!! பின்னர் இங்கு ஆய்வு பணிகளை மேற்கொண்ட பிறகு. தான் இது நாம் கட்டியது என்று தெரிய வந்தது!!!



கட டி


இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட, இப்போதைக்கு இது போன்ற ஒரு கட்டிடம் கட்ட 300 ஆண்டுகள் ஆகும் என ஒரு பொறியாளர் கூறி உள்ளார். ஆனால் எந்த தொழில் நுட்பமும் இல்லாத அந்த காலத்தில் வெறும் 40 ஆண்டுகளில் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதில் இன்னொரு சிறப்பு “கம்போடிய நாட்டு தேசியக்கொடியில் நம் தமிழர்கள் கட்டிய இந்த கோயில் தான் “தேசிய சின்னமாக” ஆட்சிப் பொறுப்பு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கடவுள்களின் இருப்பிடமாகக் கருதப்படும் மேரு மலையினைக் குறிப்பதாக உள்ளது. மத்திய கோபுரங்கள் மேரு மலையிக் ஐந்து சிகரங்களைக் குறிக்கின்றது. சுவர்களும், அகழியும், பிற மலைத்தொடர்களையும், கடலையும் குறிக்கின்றது. இக்கோயில் நகரத்தில் இருந்து சிறிது உயர்த்தப்பட்ட ஒரு தளத்தின் மீது அமைந்துள்ளது. மூன்று சதுர கூடங்கள், மத்திய கோபுரத்துடன் இணைந்துள்ளது. இக்கூடங்களும் கோபுரமும், அரசன், பிரம்மா, சந்திரன் மற்றும் விஷ்ணுவுக்காக அர்பணிக்கப்ப ட்டுள்ளது என கூறப்படுகிறது. முதல் மண்டபம் வெளிப்புறம் சதுரத் தூண்களையும் உட்புறம் மூடிய சுவரையும் கொண்டுள்ளது. தூணஒ்களுக்கு இடைப்பட்ட விதானம் தாமரைவடிவ அலங்காரங்களைக் கொண்டுள்ளது. மூடிய சுவர் நடன உருவங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இச்சுவரின் வெளிப்புறும் தூண்களோடு கூய பலகணிகள், அப்சரஸ்கள் மற்றும் விலங்குகளின் மீதமர்ந்து நடனமாடும் ஆண் உருவங்கள் முதலியவற்றால் அலங்காரம் செய்யப் பட்டுள்ளது. எல்லா மண்டபங்களின் சுவர்களிலும் அப்சரஸ் உருவங்கள் காணப்படுகின்றன. முதல் மண்டபத் தலிருந்து நீண்ட வழிமூலம் இரண்டாது மண்டபத்தை அடைய முடியும். இது இரண்டு பக்கங்களிலும் சிங்கச் சிலைகள் அமைந்த படிக்ட்டைக் கொண்ட மேடையி லிருந்து அணுகப்படுகிறது. இரண்டாவது மண்படத்தின் உட்சுவர்களில் வரிசையாக அமைந்து புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. மேற்குப் பக்கச் சுவரில் மகாபார காட்சிகள் காணப்படுகின்றன. மூன்றாவது மண்படம், உயர்ந்த மேல் தளத்தின் மீது ஒன்றொடொன்று மண்டபங்களால் இணைக்கப்பட்ட



ஐந்து கோயில்களைச் சூழ அமைந்துள்ளது. மண்டபங்களின் கூரைகளை பாம்புகளின் உடல்களையும் சிங்கம் அல்லது கருடனின் தலையையும் கொண்ட உருவங் களால் அலங்கரிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டுள்ளன. மேற்குப் பக்கத்திலுள்ள முதன்மைக் கோயிலின் வெளி முற்றத்தில் இரண்டு நூலகங்கள் அல்லது சிறிய கோவில் அமைப்புக்கள் உள்ளன. அகழிக்கு வெளியே அதனைச் சுற்றி புல்வெளிகளமைந்த பூங்காக்கள் உள்ளன. 1982 மற்றும் 1992 மத்தியில் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் இக்கோயிலின் புதுப்பித்தல் பணியினை செய்தது. அப்போதிலிருந்து இக்கோயிலின் சுற்றுலா வரவு பெருகியது. இக்கோயில் 1992 நிறுவப்பட்ட அங்கோரின் உலக பாரம்பரிய களத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் இதைப் பராமரிக்க கம்போடிய அரசுக்கு ஊக்கமும், நிதி உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஜெர்மன் அப்சரா பாதுகாப்பு திட்டம், இக்கோயிலின் அலங்காரத்தையும் கட்டமைப்பையும் பேணும் தேவதாக் களைப் பாதுகாத்து வருகிறது. உலக நினைவிடங்கள் நிதியம், 2008ல் பாற்கடல் கூடத்தை பல ஆய்வுகளுக்கு பின்னர் புதுப்பிக்கும் பணியினை மேற் கொண்டுள்ளது. இப்பணியின் முக்கிய கட்டம் 2012ல் முடிவடைந்தது. இறுதிக் கட்டமாக முக்கோண வடிவிலான அலங்கார கும்பம் 2013ல் நிறுவப்படும் எனத் தெரிகிறது. 2004 மற்றும் 2005ல், கம்போடிய அரசாங்க புள்ளி விபரங்களின் படி முறையே 561,000 மற்றும் 677,000 வெளிநாட்டுப் பார்வையாளர்கள் இரண்டு ஆண்டுகளாக கம்போடியாவுக்கு வருகை புரிந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலா வர்த்தகம் இக்கோயிலைப் பாதுகாக்க பெரும் அளவில் உதவி யது.

ஆனால் அதிக அளவு பார் வையாளர்களின் வரவால் இக் கோவிலின் சுற்று வட்டாரம் மாசுபட் டுள்ளது குறிப்பிடத் தக்கது. எனவே இதைக கட்டுப்படுத்த யுனெஸ்கோவும் அதன் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவும் சேர்ந்து அதனைப் பாதுகாக்க முடிவு செய்தது.

இதைப் பற்றி எழுத சொன்னால் இந்த நாள் முழுவதும் இதன் சிறப்புகளை வரிசைபடுத்திக் கொண்டே இருக்கலாம். கடைசியாக ஒன்று இந்த 2014 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு கேமராவில் கூட இன்று வரை இதன் முழு கட்டிடத்தையும் படம் பிடிக்க முடியவில்லை!! வானத்தில் 1000 அடிக்கு மேல் விமானத்தில் இருந்து எடுத்தால் மட்டுமே இதன் முழு கட்டிடமும் பதிவாகின்றது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த




இந்த இடத்தை பற்றி எத்தனை பேருக்கு தெரியும் என்பது தெரிய வில்லை. குறிப்பாக இது நம் தமிழ் மன்னன் எத்தனை தமிழர்களுக்கு தெரியும் என்பதும் கேள்விக்குறியே!!

இன்றும் தாய்லாந்தில் மன்னர், ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்று முன் நமது திருப்பாவையை தாம் பாராயணம் செய்து பின்னர் பதவி ஏற்பது தான் வழக்கத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிசெய்

தந்தை முக்கிய வேலையாக இருந்தார். அப்போது அவருடைய எட்டு வயது மகன் அடிக்கடி அங்கு வந்து, தந்தையிடம் பல்வேறு வினாக்களைக் கேட்டு கொண்டி ருந்தான். உலகம் ஏன் உருண்மையாக இருக்கிறது? சூரியன் ஏன் கிழக்கே உதிக்கிறது? வானம் ஏன் நீலமாக இருக்கிறது? என்றெல்லாம் ஆராய்ச்சிக்கு ரிய கேள்விகளை அவன் தொடர்ந்து கேட்டுக் கொண்டி ருந்தது. தந்தைக்குத் தொந்தரவாக இருந்தது. தன் மகனுக்கு விளையாட்டாக ஏதேனும் ஒரு வேலையைக் கொடுத்து விட்டால், தனது வேலை கெடாது என்று நினைத்தார் அவர். தனது மேஜையின் மேலிருந்து உலக வரைபடத்தை எடுத்து மகனிடம் காண்பித்து, இது என்ன ? என்று கேட்டார். ஓ....... தெரியுமே! இது உலகப்படம். எங்கள் ஆசிரியர் இதைக் காண்பிக்கின்றார் என்றார் மகன்.

உடனே அப்பா மேஜையின் மீதிருந்த ஒரு கத்திரிக்கோலை எடுத்து, உலக வரைபடத்தைத் துண்டு துண்டாக வெட்டி சீட்டுக் கலைப்பது போல் கலைத்தார். அதை மகனிடம் கொடுத்து, இந்த உலகப் படத்தை முதலில் இருந்தது போல் ஒரு காகித்தில் ஒழுங்காக ஒட்டிக்கொண்டு வா! உனக்கு ஒரு பரிசு தருகிறேன் என்று கூறுகினார்.

விவரம் தெரிந்த பெரியவர் களுக்கே இதை செய்து முடிக்கச் சில மணிநேரம் ஆகும். தன் மகனால் இதை அவ்வளவு சுலபமாக ஒட்டிவிட முடியாது! என்று தந்தை நினைத்தார். ஆனால், முற்றிலும் சரியாக ஒட்டப்பட்ட உலகப் படத்துடன் பத்தே நிமிடத்தில் வந்து நின்றான் மகன். தந்தைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை இதை இவ்வளவு சீக்கிரம் எப்படிச் செய்து முடித்தாய்? என்று கேட்டார்?

அப்பா, நீங்கள் கிழித்துக் கொடுத்த காகிதத்தின் மறு பக்கத்தில் ஒரு மனிதனின் படம் துண்டு துண்டாக இருந்தது. அந்த மனிதனின் உருவத்தை நான் சரி செய்தேன். உலகம் தானாகவே சரியாகிவிட்டது என்றான் மகன். எத்தனை பெரிய உண்மை! தனி மனிதனை சரிசெய். உலகம் சரியாகிவிடும் என்ற தத்துவத்தை இந்த சம்பவத்தின் மூலம் தெரிந்துகொண்டார் அந்தத்தந்தை


## சந்தா விபரம்

**இந்துக்களின் குரல்**

தனிப்பிரதி ரூபா 60.00

ஆண்டு சந்தா ரூபா 700

இரண்டாண்டு சந்தா ரூபா 1350.00

ஐந்தாண்டு சந்தா ரூபா 3250.00

சந்தா தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 0770226200 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகலாமோ கற்பகத்தரு

வாணன்



மரங்கள் இயற்கை நமக்கு அளித்த வரம் என்று நினைக்கிறோம். ஆனால் நமது பண்பாட்டின் அடையாளம் என்ற பெருமை கொண்ட பனை மரங்கள் இன்று படங்களிலும் வட மாகாண சபையின் சின்னத்திலும் மட்டுமே வாழுகின்றது. கடந்த கால யுத்தம் எமது சனத் தொகையை மட்டுமல்ல பனைகளின் தொகையையும் தான் குறைத்து விட்டது. அன்பான தனது தமிழ் சொந்தங்கள் அழிவதை தடுக்க தன்னையே அழித்தது பனை. பழிங்கு குழிகள் அமைக்க ஒருகாலம், மறைப்பணைகள் அமைக்க ஒரு காலம் என இன வேறுபாடின்றி அனைவருக்கும் உதவியது பனை. சிங்களவன் என்றாலும் தமிழன் என்றாலும் தன்னை அழித்து பாதுகாப்பு தேடும் போது தன் வயிரம் பாய்ந்த உடலினால் அனைவரையும் பாதுகாத்தது பனை. குண்டடி பட்டு மொட்டையாக நிற்கும்.

மரங்களும் உடலில் பொத்தல் விழுந்தும் நிமிர்ந்து நிற்கும் மரங்களும் இரு வேறு எண்ணங்களை மனத்தில் அழுத்துகிறது. பனைக்கும் தமிழர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இன்றைய பனைகளின் நிலைமை எமது சமகால நிலைமையை உமக்கு பறை சாற்றுவதாகவே உள்ளது. இந்துக்கள் சில சூழல் மாற்றங்களை கொண்டு எதிர்காலத்தை கணிப்பிடுவர். ஆகவே இன்று பனைகளின் நிலையும் எமது மோசமான அழிவினையும் அதனை புனரமைக்க வேண்டிய தேவை அனைவராலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதகைப் போன்றே பனைகளின் அளவினையும் நாம் அதிகரிக்க வேண்டிய தேவையும் எம்முன் அதிகரித்துள்ளது. எமது தமிழர்களின் சனத்தொகையை நினைக்கும் போது ஒருவித கவலையும் எதிர்கால பயமும் மனதில் தோன்றி இன்ம்புரியாத சஞ்சலத்தை ஏற்படுத்துகின்றது. அது போன்றே பனைகளின் நிலைமையும்.



புற்றாளி, புற்பதி, போந்து, பெண்ணை, தாளி, தருவிராகன், கரும்புறம், காமம், தாலம், ஓடகம் அழைக்கப்பட்ட பனைமரம் இன்றைக்கு சொல்லில் மட்டுமே வாழுகிறது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


# சண் பன்சி ஹவுஸ்

SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA

## மட்டுநகரின் பிரமாண்டமான காட்சியறை

இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கான பித்தளை, வெண்கல பொருட்கள், எவர்சில்வர், பிளாஸ்ரிக் அன்பளிப்பு பொருட்கள், சமயலறை உபகரணங்கள், அலங்கார பொருட்கள், விளையாட்டு பொருட்கள், இமிரேசன்ஸ்

இந்தியா, சைனா பொருட்களின் இறக்குமதியாளர்கள்

SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA

SUN FANCY HOUSE
PRIDE OF BATTICALOA

## சண் பன்சி ஹவுஸ்

மட்டுநகரின் பிரமாண்டமான காட்சியறை

தமிழர் கலாச்சாரத்தின் சங்கமம்

1996ம் ஆண்டு சிறிய விற்பனை நிலையமாக ஆரம்பிக்கப்பட்டது மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையாலும் அதன் பிரகாரம் தந்த தொடர்ச்சியான ஆதரவாலும் இன்று சிறப்பு மிகு 18 வருடங்கள் கடந்து மட்டு நகரின் முன்னனி காட்சியறையாக திகழ்கிறது

## சண் பன்சி ஹவுஸ்

- இந்து கிறிஸ்தவ ஆலயங்களுக்கான பொருட்கள்
- வெண்கலம், பித்தளை, எவர்சில்வர், அலுமினிய பொருட்கள்
- *Cosmetics*
- *Imitation Accessoris*
- *Toys*
- அன்பளிப்பு பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
- சுவர் அலங்காரங்கள்
- *Grand Father Clock*
- சமையலறை உபகரணங்கள், தையற் பொருட்கள்
- காகி தாகிகள்
- *Souveniers*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We congratulate the Principal, Teachers, Students, School Development Committee, Past Pupils' Association and well wishers of Batticaloa Methodist Central College for the 200 years of devoted service to the Education sector.


# SUN SHINE GRAND

Modern Reception Hall

**The Only Choice in Batticaloa for...**

- Wedding Receptions,
- Birthday Parties,
- Anniversary events,
- Conferences & Workshops,


SUNSHINE

Munai Street, Batticaloa (Opposite to the Main Bus Stand)

Tel: 065-4927927, 065 2225159, E-mail: info@sunshinefoods.lk web: www.sunshinefoods.lk


© 2014 Bicentenary Committee, Batticaloa Methodist Central College.

# BI-CENTUM




BATTICALOA METHODIST CENTRAL COLLEGE

இந்துக்களின் குரல் ஆனி - ஆடி சஞ்சிகை யாழ்ப்பாணம் இணுவில் கஜானந் அச்சகத்தில் அச்சிடப்பட்டு இந்துத்துவ வெளியீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்றது.